பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி13 ஞாயிற்றுக்கிழமை (29-07-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:245

### சர்வஜன வாக்கெடுப்பின்போது

# யாழ். குடாநாட்டுக்கு தென் பகுதியிலிருந்து தேர்தல் முகவர்கள்!

## முறைகேடுகளைத் தடுக்க எதிர்க்கட்சிகள் முஸ்தீபு

யாழ்ப்பாணம்,ஜூலை29

**எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பின் போது குடாநாட்டில் தேர்தல் முறைகேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், பல நூற்றுக்கணக்கான வாக்களிப்பு முகவர்களை தெற்கிலிருந்து இங்கு கூட்டி வந்து கடமையில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளை எதிர்க்கட்சிகள் செய்து வருகின்றன.**

**தீவுப் பகுதியிலேயே பெருமளவில் தேர்தல் முகவர்களைக் கடமையில் ஈடுபடுத்த எதிர்க்கட்சிகள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிகின்றது.**

கடந்த பொதுத் தேர்தலின் போது குடாநாட்டில் பெருமளவு தேர்தல் முறைகேடுகள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படுவது தெரிந்ததே.

தீவுப் பகுதியில் ஈ.பி.டி.பியின் தேர்தல் முகவர்கள் மட்டுமே கடமையாற்றியதும் -

தேர்தலன்று தீவுப் பகுதியில் அப்பணியை மேற்கொள்வதற்காக சென்றுகொண்டிருந்த ஐ.தே.கவின் தேர்தல் முகவர்கள் இடைவழியில் ஆயுதமுனையில் கடத்தப்பட்டு, அப்பணியில் ஈடுபடவிடாமல் தடுக்கப்

(14ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள

# வன்னிப் பிரதேசத்தில் நால்வரைக் காணோம்!

வவுனியா,ஜூலை29

வவுனியா இறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த நால்வர் கடந்த 24 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேவராஜா நவேந்திரன் (வயது 11), செல்வரத்தினம் சத்தியகுமார் (வயது 21), சரவணமுத்து ஸ்ரீகாந்தன் (வயது 24), விக்கிரமசிங்கன் தமிழ்ச்செல்வன் (வயது 21) ஆகியோரே காணாமல் போயிருப்பதாகப் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

ஓமந்தை இறம்பைக்குளம் வாசிகளான இவர்கள் போர்ச்சூழல் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கோயில்குஞ்சுக்குளம் பகுதியில் வசித்து வந்தனர்.

கடந்த 24ஆம் திகதி மருதமடு கொம்புவைத்தகுளத்துக்கு மீன் பிடிப்பதற்காகச் சைக்கிளில் சென்ற இவர்கள் இன்னமும் வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## முஸ்லிம் காங்கிரஸ் குழு இன்று வவுனியா விஜயம்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழு ஒன்று இன்று வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது. தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக வவுனியாவிலுள்ள முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து ஆராய்வதற்காகவே இந்த விஜயம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## சுவிஸில் நேற்று பொங்கு தமிழ்!

ஈழத்தமிழர்களின் ஏற்பாட்டில் சுவிஸில் நேற்று மாலை பொங்கு தமிழ் நிகழ்வு பெரும் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டதாக அறிவிக்கபபடுகின்றது.

ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். அங்கு பொங்கு தமிழ்ப் பிரகடனம் உணர்ச்சிபூர்வமாக வாசிக்கப்பட்டது.

போரில் உயிர் நீத்த போராளிகளுக்கு வணக்கம் செலுத்துவதுடன் ஆரம்பமான நிகழ்வில் பொங்கு தமிழ்ப் பிரகடனத்தைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீது நடத்திய தாக்குதலில் உயிரிழந்த போராளிகளுக்கும் புகழாரம் சூட்டிக் கவிதைகளும் வாசிக்கப்பட்டன. (ம-6)

### தற்போதைய நெருக்கடி நிலையை அடுத்து

# வடக்கு – கிழக்கு மாகாணசபை நிதியில் ஒரு பகுதியை திறைசேரி மீளப் பெற்றது

கொழும்பு,ஜூலை29

மத்திய அரசாங்கத்தால் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் இருந்து 2 கோடி 40 லட்சம் ரூபா நிதியை திறைசேரி மீளப் பெற்றுள்ளது.

அரசாங்கத்திற்குத் தற்போது திடீரென ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காகவே ஒதுக்கப்பட்டிருந்த நிதியை திறைசேரி மீளப்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசின் இந்தத் திடீர் நடவடிக்கை காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பல்வேறு புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் தடைப்பட்டுள்ளதாகவும் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 11 விவசாய நீர்ப்பாசன திட்டங்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக தாம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருடனும் பேச்சு நடத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-6)

## ஜானக பெரேராவின் திடீர் வருகை ஏன்?

### செய்தி வட்டாரங்களில் பரபரப்பு

கொழும்பு,ஜூலை29

ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ உயரதிகாரியான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா திடீரென இலங்கை திரும்பியிருப்பது கொழும்புச் செய்தி வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

பலத்த சர்ச்சைகளுக்கு மத்தியில் ஆஸ்திரேலியாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட ஜானக பெரேரா ஓரிரு வாரங்களுக்கு முன்னர்தான் அங்கு சென்று தமது பதவியைப் பொறுப்பேற்றிருந்தார்.

ஆனால் -

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய கையோடு -

அதற்குப் பின்னர் கட்டுநாயக்காவில் வந்திறங்கிய முதலாவது சர்வ

(14ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுநாயக்கா தாக்குதலின் பின்னும் சமாதான முயற்சிகள் கைவிடப்படா

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை29

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய பின்னரும் கூட அரசு சமாதானத்துக்கான நடவடிக்கைகளைக் கைவிடாது என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருக்கின்றார்.



இந்தியாவில் தொலைக்காட்சி ஒன்றுக்கு நேற்று வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

"எல்லா வகையான பிரச்சினைகள், தடைகள், நெருக்கடிகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் சமாதான முயற்சிகள் தப்பிப் பிழைத்தே வந்துள்ளன என்பதைத்தான் சரித்திரம் காட்டுகின்றது. இந்தத் தாக்குதலில் இருந்து விடுபட்டு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இன்னும் வாய்ப்புகள் உள்ளன.

"புலிகளின் இந்தத் தாக்குதல் சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட ஒரு தடங்கல். புலிகளின் இந்தத் தாக்குதல் கண்டிக்கத்தக்கது.

"உலகினால் இன்று வகுக்கப்பட்டுள்ள மனித இயல் தொடர்பான சட்டங்களின்படி விடுதலைப் புலிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். புறநகர்ப் பகுதிகள் நேற்று சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்.புறநகர்ப் பகுதிகளான திருநெல்வேலி, கந்தர்மடம், கொக்குவில் மற்றும் கலட்டி ஆகிய பிரதேசங்கள் நேற்று அதிகாலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

நேற்று அதிகாலையிலேயே இந்தப் பகுதிகளைச் சுற்றி பல நூற்றுக்கணக்கான படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச அலுவலக ஊழியர்கள் தவிர வேறு எவரும் தமது வீடுகளை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படவில்லை. அதே நேரம் இந்தப் பகுதிகளுக்குள் நுழையவும் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

அதிகாலையில் நல்லூர் ஆலயத்திற்குச் சென்ற பக்தர்களும் இந்தப் பகுதிகளில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

வீடு வீடாகச் சென்ற படையினர் குடும்ப அட்டைகளையும் அடையாள அட்டைகளையும் சோதனையிட்டனர். சந்தேகத்துக்கிடமானவர்களையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர். எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் கிடைக்கவில்லை. பிற்பகல் 2மணிக்கு நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ம-4-6-10-15-173)

## இரு சிறுவர் உட்பட மூவர் ஷெல் தாக்குதலுக்குப் பலி!

### மட்டு. கின்னையடியில் கோரம்

மட்டக்களப்பு,ஜூலை29

மட்டக்களப்பு கிண்ணையடி கிராமத்தில் நேற்றுக்காலை ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் இரண்டு சிறுவர்கள் உட்பட மூவர் உயிரிழந்தனர்; மேலும் மூன்று சிறுவர்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

முருகுப்பிள்ளை தினேஷ் (வயது 10), நவநாயகம் கிருதிகன் (வயது4), குழந்தைவேல் விஸ்வலிங்கம் (வயது 60) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

முருகுப்பிள்ளை மாலினி (வயது7), முருகுப்பிள்ளை சத்தியேஸ்வரி (வயது 17), அழகையா கௌரிநாத் (வயது 6), அழகையா சாந்தினி (வயது 16), நாகம்மா ஜீவா (வயது5), பாலரத்தினம் பாரதிதாசன் (வயது 23) ஆகியோர் காயமடைந்து மட்டக்

(14ஆம் பக்கம் பார்க்க)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் நாளைய உதயனில்!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இசை நாதம் அணைந்தது

காரையம்பதி

ஈழத்துச் சிதம்பர ஆஸ்தான வித்துவான் இசைநாதமணி - இசைச்சக்கரவர்த்தி, நாதஸ்வர வித்துவான்

## N.K.கணேசன்

அவர்களின் மறைவு காரை. வாழ் மக்களுக்கும் கலையுலகிற்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

**சிறிமுருகன் தொலைத்தொடர்பு சேவை**

*சிவன் கோயில் வீதி,*
*காரைநகர்.*
***T.P.** 070 21-2472*

303,K.K.S. Rd., யாழ்ப்பாணம்.
T.P: 021-2670, 3588
FAX: 021-3214

(C/17622)

# கண்ணீர் அஞ்சலி

காரையம்பதி தந்த நாதஸ்வர வித்துவான்

## N.K.கணேசன்

அவர்களின் மறைவையொட்டி இணுவையூர் தவில், நாதஸ்வர வித்துவான்களின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

காரையம்பதி கணேசன் அவர்கள் சகல தவில், நாதஸ்வர வித்துவான்களோடு நாதகானமழை பொழிந்து ஈழம் வாழ் சகல ரசிகர்கள் மத்தியிலும் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்தது மட்டுமன்றி சகல கலைஞர்களோடும் இன்முகத்தோடு புன்முறுவல் பூத்த வண்ணம் அன்போடும், பண்போடும், பாசத்தோடும் பழகிய அந்தத் திருவுருவம் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டது.

40 ஆண்டுகள் ஈழத்துச் சிதம்பரத்தில் இசைத் தொண்டு புரிந்த எங்கள் கலைஞனை தில்லைக்கூத்தன் அணைத்துக் கொண்டான்.

அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்

தவில் வித்துவான்
R.புண்ணியமூர்த்தி.

(90590)

# கண்ணீர் அஞ்சலி

## கையிலாயக்கம்பர் கணேசன்

(நாதஸ்வர மேதை, கானவாரிதி)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் எனது உற்ற நண்பரும் வியாவில் ஐயனார் ஆலயம், போசுட்டி முருகன் ஆலயம் என்பனவற்றின் ஆஸ்தான வித்துவானுமாகிய **நாதஸ்வரமேதை கானவாரிதி காரைக்கணேசன்** அவர்களின் மறைவையொட்டி எனது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடைய பூரணை பொற்கலை சமேத ஐயப்பனை இறைஞ்சுகிறேன்.

நிர்வாகி,
வியாவில் ஐயனார் தேவஸ்தானம்.

*காரைநகர்.* (C/17623)

# கண்ணீர் அஞ்சலி

காரைநகர் நாதஸ்வர வித்துவான்

## N.K.கணேசன்

அவர்களின் மறைவுகேட்டு அதிர்ச்சியுற்ற நாம் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நீலிப்பந்தனை தூர்க்கை அம்பாளின் பாதங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

நீலிப்பந்தனை இளைஞர்களும், இசைப்பிரியர்களும்.
*நீலிப்பந்தனை, காரைநகர்.*

(C-17626)

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை29

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் நடைபெற்று வரும நிகழ்ச்சிகளில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:-

நல்லை திருஞானசம்பந்தர் ஆதனத்தில் இன்று அதிகாலை 5 மணிக்கு திருமுறை வீதி பஜனையும் அதைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் விசேட பூஜை ஆராதனைகளின் பின்னர் 'கந்தபுராணம்' புராணபடனம் நடைபெறும். (ஐ)

★ ★ ★

அரியாலை,ஜூலை29

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6 மணிக்கு எஸ்.ஞானசொரூபனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். (ஐ-17-86)

★ ★ ★

கம்பன் கோட்டத்தில் தினமும் மாலை 6 மணி முதல் 7 மணிவரை அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் இன்று செஞ்சொற்செல்வர் இரா. செல்வவடிவேல் கந்தபுராணச் சொற்பொழிவை நிகழ்ததவுள்ளார். (க-4-86-17)

# குடிதண்ணீர் கிணறுகள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு,ஜூலை29

உடுவில் மத்தி, வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வாழும் பல குடும்பங்களால் பாவிக்கப்பட்டுவரும் சுகாதார வசதியற்ற, பாழடைந்த பல குடிதண்ணீர்க் கிணறுகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்கள் சுகாதாரமான நீரைப் பெற்றுக்கொள்வதற்குரிய வசதிகள் ஏற்பட்டுள்ளன.

உடுவில் உதயசூரியன் குறுக்கு வீதி, நாகம்மாள் கோவில் வீதி ஆகிய இடங்களில் உள்ள பொதுக் கிணறுகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் ஏற்கனவே புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும் ஒரு கிணறு புனரமைப்பு வேலைகள் உதயசூரியன் வீதியில் நடைபெற்று வருகின்றது.

(ம-152)

# தாச்சிப் போட்டி

வலி.வடக்கு,ஜூலை29

யாழ்மாவட்ட தாச்சி சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு மருதனார் மடம் திறந்த வெளியரங்கு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

அரியாலை காந்தி விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி பூமகள் விளையாட்டுக்கழகம்.

(ம-86)

# நாதஸ்வர வித்துவான் என்.கே.கணேசனுக்கு அஞ்சலி

காரையம்பதி நாதஸ்வர வித்துவான் என்.கே.கணேசன் காலமானார் என்ற துயரச் செய்தியை நம்மக்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் இசைநாதமணி, இசைச் சக்கரவர்த்தி நல்லகுண்டு கையிலாயக்கம்பர் கணேசன் நேற்று (28.07.2001) சனிக்கிழமை காலமானார். இவர் 1960ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தனுக்கு இசைமழை பொழிய ஆரம்பித்தார்.

அன்னார் மாவிட்டபுரம் நாதஸ்வர வித்துவான் மறைந்த மாமேதை ராசா அவர்களைக் குருவாகக் கொண்டு இசைப் பயிற்சி பெற்று காரைநகர் மண்ணுக்கும் மக்களுக்கும் பேரும் புகழும் தேடித்தந்தார்.

ஆரம்பத்தில் இவர் அளவையூர் S.S.சிதம்பரநாதன் அவர்களுடன் சேர்ந்து வாசித்தார். தென் இந்தியாவில் இருந்து வந்த பல வித்துவான்களுடன் சேர்ந்து வாசித்துப் பெருமையும் பெற்றவர் இவர்.

குறிப்பாக 1971 ஆம் ஆண்டு மார்கழி திருவாதிரைத் தினத்தன்று ஈழத்துச் சிதம்பரத்தில், தமிழகத்தில் இருந்து வருகைதந்த தவில் வித்துவான்கள் அரிந்துவார மங்கலம், பழனிமலை, திருவாழபுத்தூர் கலியமூர்த்தி அவர்களுக்கு கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் V.A.பாலகிருஸ்ணன் உடன் சேர்ந்து இசைநாத மழை பொழிந்து புகழடைந்தார். இவர் ஈழத்தில் உள்ள சகல தவில், நாதஸ்வர வித்துவான்களுடனும் பல மேடைகளில் சேர்ந்து வாசித்து ரசிகர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

கலை உலகில் நாதஸ்வர இசையில் ராகமாலிகை, நாகவிராளி போன்ற இராகங்களை ஆள்வதில் இவருக்கு நிகர் இவரேதான்.

1966ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனி உற்சவத்தின் போது முதன்முதல் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். பின்பு பல பட்டங்களும் பதக்கங்களும் பொன்னாடைகளும் அவரைக் கௌரவித்தன. இவர் 41 ஆண்டு காலமாக ஈழத்துச் சிதம்பரத்தில் இசைமழை பொழிந்தார்.

அன்னாரின் இசைநாத மழையில் திருப்தி கண்டோ என்னவோ தில்லைக்கூத்தன் அவரைஅரவணைத்துக் கொண்டார். அன்னாரின் ஆத்மா சாந்திபெற தில்லைக்கூத்தன் பாதார விந்தங்களை இறைஞ்சுகின்றோம்.

காரை வாழ் மக்கள் சார்பாக,
ந.தர்மராசா (M.G.R.)

(90592)

# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் பரமன்

(இளைப்பாறிய ஆசிரியர், வட்டு. இந்துக் கல்லூரி)

வட்டு.கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த மயில்வாகனம் பரமன் (இளைப்பாறிய ஆசிரியர், வட்டு.இந்துக்கல்லூரி) 26.07.2001 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வநாயகியின் அன்புக் கணவரும் இளங்கோவன் (தாய்லாந்து), அமுதன் (பேராதனை பொறியியல் பீடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, திலகவதி ஆகியோரின் மருமகனும் மற்றும் திருமணச்செல்வியின் (தங்கம்) அன்புக் கணவரும் மாணிக்கவாசகர் (சிங்கப்பூர்), காலஞ்சென்றவர்களான கனகசபை, திலகவதி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜரட்ணம், சோதிலிங்கம், குணசேகரன், ஜெயமலர், காலஞ்சென்ற கதிர்காமராஜா ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரனின் (வடக்கு - கிழக்கு மாகாண கல்விச் செயலாளர்) சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.07.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து வழுக்கையாறு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மகன்மார்கள்.

*வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.* (90583)

## திருமதி டாக்டர் C.B.கெங்கம்மா பியூபல்

F.R.C.O.G. (தெல்லிப்பழை)

இந்தியா பெங்களூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீண்டகாலமாக இலங்கை தெல்லிப்பழையில் வசித்து வந்தவருமாகிய திருமதி டாக்டர் **C.B.**கெங்கம்மா **F.R.C.O.G.** அவர்கள் (இணுவில் - மருத்துவமனையில் மகப்பேற்று நிபுணராகக் கடமையாற்றியவரும் பின்னர் தெல்லிப்பழைக் கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றியவரும்) நேற்று முன்தினம் (27-07-2001) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தேவா பியூபல் (இணுவில் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மின்துறைப் பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வி மாயா கிருபா பியூபல் அவர்களின் அன்புத் தாயாரும், **C.B.**கரியப்பா (பெங்களூர்), **C.B.**முத்தம்மா (பெங்களூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற **Dr.** தேவா பியூபல் (கொழும்பு), பெஞ்சமின் பியூபல் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திருமதி புஸ்பம் குமாரசாமி (லண்டன்), மற்றும் திருமதி மேரி ஜேக்கப் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் **C.B.K.**குமாரசாமி (லண்டன்), ஜேக்கப் (கனடா) ஆகியோரின் உறவினருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-07-2001) ஞாயிறு பிற்பகல் ஒரு மணியளவில் இவரின் இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:-
*கூட்டுறவு வைத்தியசாலை அருகில்,*
*தெல்லிப்பழை கிழக்கு,*
*தெல்லிப்பழை.* (90575)

தகவல்:
வைரஞ்சோதிநாதன்,
மனைவி:- அன்னபூபதி,
பிள்ளைகள்:- அருட்செல்வன், இளங்கோ, வாணி, நித்யா.

ஈழத்துச்சிதம்பர பிரபல நாதஸ்வர வித்துவான் காரைநகர்

## கையிலாயக்கம்பர் கணேசன்

கையிலாயக்கம்பர் கணேசன் நேற்று (28-07-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கையிலாயக்கம்பர் - கோமதிஅம்மா தம்பதிகளின் அன்பு மகனும், யோகம்மாவின் அன்புக்கணவரும், பரமேஸ்வரி (யா/இந்து ஆசிரியை), காலஞ்சென்ற நித்தியகல்யாணி மற்றும் பவப்பிரியன் (நாதஸ்வரம்), சந்திரப்பிரியன் (நாதஸ்வரம்), செந்தூரன் (தவில்), கஜந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ரவீந்திரனின் மாமனாரும் நடேசன் (தவில்), ஐயாச்சாமி, வீராச்சாமி (தவில்), நாகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற மனோன்மணி, இராசலட்சுமி, சிதம்பரதானு ஆகியோரின் அன்பு மைத்துனரும், நகுலேஸ்வரி, சௌந்தராம்பிகை, அம்பிகைபாகன், ரமணன் ஆகியோரின் சிறிய தகப்பனும், நந்தகோபாலன், அரிகரபுத்திரன், நாகரஞ்சினி, கலைவாணி ஆகியோரின் பெரிய தகப்பனும், அருச்சுனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சம்பந்தர்கண்டி,*
*காரைநகர்.* (90576)

தகவல்:
க. யோகம்மா (மனைவி)

## நல்லதம்பி துரைச்சாமி

புங்குடுதீவு கிழக்கு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நல்லதம்பி துரைச்சாமி நேற்று (28.07.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*99/7,பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/17621)

தகவல்:
து.பொன்னம்மா (மனைவி)

## கந்தையா கதிரேசு

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரேசு நேற்று (28-07-2001)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா - சிவபாக்கியம் தம்பதிகளின் மூத்த மகனும் வேலுப்பிள்ளை - பாக்கியலெட்சுமி தம்பதிகளின் மூத்த மருமகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும், சுதன் (ஜேர்மனி), ரமணன் (வன்னி), ரங்கநாதன் (ஜேர்மனி), ஜெயந்தி (கொழும்பு), ஜெகநாதன் (நாரந்தனை), சுகந்தி (சிறிய புஸ்ப மகளிர் மகாவித்தியாலயம்,கரம்பொன்) ஆகியோரின் தந்தையும் மீனாம்பிகை (சுவிஸ்), குமரேஸ்வரன் (சுவிஸ்), மனோன்மணி (நாரந்தனை), தேவராசா (ஜேர்மனி), தியாகராஜா (சுவிஸ்), காலஞ்சென்ற கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணபதிப்பிள்ளை, தனலட்சுமி, வசந்தா, முருகேசுபிள்ளை, சாந்தா, சத்தியேந்திரா, கேதாரநாதன், இந்திராணி, சிவபாதசுந்தரம், சிவனேசகுகன், வள்ளிநாயகி, கனகரத்தினம், கிருபாதேவி, காலஞ்சென்ற சந்திரபாலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29-07-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் நாரந்தனை வடக்கு புன்னம்பிட்டி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை,*
*வடக்கு.* (90588)

தகவல்:-
ஜெகநாதன் (மகன்)

# துயர் பகிர்கின்றோம்

எமது அன்பு மைத்துனர்

## தர்மலிங்கம் சோமசுந்தரம்

அவர்கள் கொழும்பில் இயற்கையெய்தியமையையிட்டு அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கேற்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆலங்குழாய், சண்டிலிப்பாய்.* அன்பு மைத்துனிமார்.

(90577)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 27 - 01 - 1925



உதிர்வு 29 - 06 - 2001

## அமரர் கந்தையா மாசிலாமணி

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் திகழ்ந்தீரே!
சிரித்த முகத்துடன் பழகும் உங்களை மறக்கமுடியவில்லையே!
இனிமையான பேச்சும் கனிவான பார்வையும் நெஞ்சில் என்றும் நினைவில் இருக்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (29.07.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*14, நாவலடி லேன்,*
*கேசாவில் பிள்ளையார் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.*

மனைவி, மக்கள், மருமக்கள்

(90559)

# சோதிடம்

*கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் துல்லியமாகக் கணித்தும், எழுதியும் கொடுக்கப்படும்.*

*எண்சோதிடம், திருமணப் பொருத்தம் என்பனவும் பார்க்கப்படும்.*

*சோதிடர்:*

**நாகலிங்கம் கந்தையா**

சதுர்ஷிகா ஜோதிட நிலையம்
*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*

(90476)

# லைசன்

உடுவில்

**அளவையியல்**

பகுதி II

**திரு.சயந்தன்**

திங்கள் - 4 - 6
புதன், வெள்ளி - 5 - 6

(90427)

# தேவை

**கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள் தேவை**

**காசாளர்,**
**களஞ்சியப் பொறுப்பாளர்,**
**சிட்டை லிகிதர்.**

*கல்வித்தகைமை க.பொ.த. உயர்தரம் உள்ளவர்களும், அனுபவத்தில் மூன்று வருடத்திற்குக் குறையாதவர்களும், 25 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்களும் 01.08.2001 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.*

**குறிப்பு:** யாழ். மாநகரசபை எல்லைக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரேடர்ஸ்,
*இல.171, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(90523)

# எரிக்கணேஷ்

இதோ!

சீன முறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களின் கைவண்ணத்தில் ஒளி புகுமுறையில் OPAQUE MATERIAL இல் பொருத்தப்பட்ட அழகிய சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்,

☆ *இதற்கு முன்பு வேறெங்காவது பல்கட்டி*
☆ *உங்களுக்குத் திருப்திப்படாத பட்சத்தில்*

அதனை மீள அழகிய முறையில் சரி பார்த்துக்கொள்ளவும், மிதந்த பற்களுக்கு 'கிளிப்' போட்டுக்கொள்ளவும், கண்களைப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள். பாடசாலை மாணவர்களுக்கு விஷேட சலுகை வழங்கப்படும். மிதப்பு பற்கள் 3 மாதங்களில் சீரமைக்கப்படும்.

## எரிக்கணேஷ்

பல் கட்டுமிடமும்
மூக்குக் கண்ணாடி அகமும்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், T.P. 2486

கிளைகள்:

*91, கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில் சந்தி,*
*கொக்குவில்.*

*80, பழைய பொலிஸ் நிலைய முன்பாக,*
*சுன்னாகம்.*

(90572)

# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் சோமசுந்தரம்

(பிரபல சட்டத்தரணியும் நொத்தாரிசும் Retd.Duty officer - Bar Association of Srilanka)

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கொழும்பு கொட்டாஞ்சேனையில் வசித்து வந்தவருமான தர்மலிங்கம் சோமசுந்தரம் அவர்கள் 25-07-2001 புதன்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் விஜயலக்ஷ்மியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை - யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி) அன்புக் கணவரும், விஜயசுந்தரி (Canada), ஜெயலக்ஷ்மி (U.K), Dr.கலாராணி (குழந்தை வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), மதியழகன் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகானந்தராஜா(Canada), நிமலன் (U.K), நளினி (U.S.A) ஆகியோரின் அன்பு மாமனாரும், சியாமினி, கிருத்திகா(Canada), பிரசன்னா, தரன்(U.K), தானியா(U.S.A) ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இன்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*257, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*65 2/1, A.G.Hini Appuhamy Mawatha,*
*Colombo - 13 T.P- 435102.*

தகவல்:
செல்வி நா.கற்பகவல்லி

(90578)




# சேதமடைந்த விமானங்களை திருத்த பிரான்ஸ் நிபுணர்கள்

கொழும்பு ஜூலை 29

கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான தாக்குதலின் போது சேதமடைந்த விமானங்களைத் திருத்துவதற்கென பிரான்ஸ் 'ஏயர்பஸ்' விமான நிறுவனத்தைச் சேர்ந்த பிரதி நிதிகள் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தது.

மேற்படி குழுவினர் சேதமடைந்த விமானங்களைப் பார்வையிட்ட பின்னர் அது தொடர்பான பூரண அறிக்கையினைச் சமர்ப்பிப்பர் எனவும் --

அந்த அறிக்கையினைப் பொறுத்தே விமானங்களைத் திருத்துதல், உபகரணங்கள் கொள்வனவு என்பன பற்றி ஆலோசிக்கப்படும் என்றும்—

ஸ்ரீலங்கன் விமான சேவையின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி பீட்டர் ஹில் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்ட சமயம் விமான நிலையத்தில் தங்கி இருந்த பயணிகள் துரித கதியில் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டனர். ஆகையால் பயணிகள் எவருக்கும் காயம்ஏற்படவில்லை. இந்த விடயத்தில் ஸ்ரீலங்கன் ஏயர் லைன் உத்தியோகஸ்தர்களும் பாதுகாப்புப்படை அதிகாரிகளும் துரித கதியில் செயற்பட்டனர்.

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் விமான நிலையம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் காரணமாக நாம் ஆறு விமானங்களை இழந்துள்ளோம். இதில் மூன்று விமானங்களை திருத்திசேவையில் ஈடுபடுத்தலாம். நாம் மீண்டும் முழுமையான வழமைக்கு திருப்பும் வரை ஒரு சில இடங்களுக்கான சேவையைக் குறைக்க வேண்டி ஏற்படும் — என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-7)

## கருத்தரங்கு

வடமராட்சி, கிழக்கு,

வடமராட்சிக்கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான 'சனத்தொகையும் குடும்ப வாழ்வும்' கல்விச் செயற்றிட்டகரத்தருங்குஎதிர் வரும் 3 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நெல்லியடியில் உள்ள ஆசிரிய பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-182)

## மைற்ஸ் நோய் தடுப்பு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையும் வடக்கு – அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சும் இணைந்து நடத்தும் தென்னைச் செய்கையில் 'மைற்ஸ்' நோய் தாக்கம் பற்றிய கருத்தரங்கும் செயல் விளக்கமும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்த விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

தென்னைப் பயிர்செய்கை சபையின் வடபிராந்திய முகாமையாளர் சி. சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பி. செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் எஸ் மகாலிங்கம், திருநெல்வேலி விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை, திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி எஸ். விஜயரத்தினம், யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் ஏ. நல்லதம்பி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் 'மைற்ஸ்' கட்டுப்பாட்டுத் திட்ட நடைமுறை'' என்னும் தலைப்பில் வடபிராந்திய தென்னைச் செய்கைச் சபை பொது முகாமையாளர் எஸ். சிவச்சந்திரனும் —

''தென்னைச் செய்கையில் மைற்ஸ் நோய்த்தாக்கமும் அதன் கட்டுப்பாடும்'' என்னும் தலைப்பில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே. சத்தியேந்திரனும் —

விளக்கவுரை நிகழ்த்தவுள்ளனர். (ஐ-4)

### ஆசிரியர்களது பிரச்சினைகள்:

# நடமாடும் சேவைகளை நடத்த தமிழர் ஆசிரியர் சங்கம் முடிவு

வடமராட்சி கிழக்கு, ஜூலை 29

யாழ். மாவட்ட ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக வலய ரீதியாக நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர்களோடு— தொடர்பு கொண்டு இந்த நடமாடும் சேவையினை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

முதலாவது நடமாடும் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தென்மராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்படவிருப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

இச் சேவையில் வலயக் கல்விப் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள், கணக்காளர் ஆகியோருடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளும் பிரசன்னமாக இருப்பார்கள்.

நடமாடும் சேவையில் ஆசிரியர்களது உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகளுககுத் தீர்வு காணப்படும் எனவும் மாகாணக் கல்வி அமைச்சுக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டிய விடயங்கள் பின்னர் அங்கு எடுத்துச் சொல்லப்பட்டு தீர்வு காணப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-182)

## மலேரியாத்தடுப்பு செயற்குழு

வடமராட்சிகிழக்கு, ஜூலை 29

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் 'மலேரியா' அதிகளவில் பரவிவருவதையடுத்து, அதனைக் கட்டுப்பாட்டுக்கள் கொண்டு வருவதற்காக, அப்பகுதி மக்கள் மற்றும் பிரமுகர்களை உள்ளடக்கிய 'மலேரியா கட்டுப்பாட்டுச் செயற்குழு' ஒன்று எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு குடத்தனை தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மேற்கொண்டுள்ளது.

(ஐ-182)

## இரவு கிணற்றில் வீழ்ந்த மூதாட்டி காலையில் மீட்பு!

தென்மராட்சி, ஜூலை 29

இரவு வேளையில் தண்ணீர் அள்ளச் சென்றபோது தவறி வீழ்ந்த மூதாட்டி மறுநாள் காலை கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

கிணற்றில் வீழ்ந்ததால் வலது கால் முறிந்த நிலையில் கடந்த புதன்கிழமை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கு சாந்தா தோட்டத்தைச் சேர்ந்த யோவான் திரேசம்மா (வயது 80) என்னும் மூதாட்டியே கிணற்றில் வீழ்ந்தவராவார்.

## ஜனாதிபதியுடன் மதகுருமார் சந்திப்பு

வலிகாமம் தெற்கு ஜூலை 29

தேசிய சமய விவகாரங்கள் பற்றிய ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய் கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு ஜனாதிபதிமாளிகையில் நடைபெற உள்ளது.


இச் கலந்துரையாடலுக்கு சகல சமயங்களையும் சார்ந்த முன்னணிக் குருமார்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த 20இற்கும் மேற்பட்டகுருமார்கள் பீடாதிபதி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக நாளை இங்கிருந்து பயணமாக உள்ளனர்.

)ஐ-152)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 26 — 09 — 1940



விண்ணில்: 09 — 08 — 2000

## அமரர் ஞானசுந்தரம் சிவசுந்தரம் (பேபி)

திதி: 29—07—2001

கதவு தட்டும் ஓசை கேட்கும் போதெல்லாம்
சிரிப்புடன் ஓடி வந்து கதவைத் திறப்பீரே!
இன்று உமக்கு சொர்க்கலோகத்தின் கதவு
திறக்கப்பட்டு ஓராண்டாயிற்றோ!

உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள்,
பெறாமக்கள்.

443, கே. கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம். (90525)

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நம!

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் குமாரசாமி அருணாசலம்

(பத்தர்)

தோற்றம் 21-11-1935 மறைவு 08-08 2000

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வானிலுறை
தெய்வமே!
ஆண்டு ஒன்று, நம் மனதில் வேதனையோ
விலகவில்லை.
வளமாக வாழ்கின்றோம்; ஆனால்
வழிசமைக்க நீங்களோ இங்கில்லை.
விழிகள் தேடும் இடமெல்லாம் உங்கள் விம்பந்தான்
தெரிகிறது!

— குடும்பத்தினர்.

சந்தை வீதி, உடுப்பிட்டி (90543)

# அம்மா உன் நினைவுகளில் ஓராண்டு

மலர்வு 17 — 03 — 1913



உதிர்வு 06 — 08 — 2000

## திருமதி சிவசம்பு சுந்தரம்

( சுந்தராச்சி )

திதி: 29—07—2001

அன்போடும் பண்போடும் எமை அரவணைத்து
வளர்த்தீர்கள்
பாசத்தோடு வாழ்ந்த உங்களை எம்மால்
மறக்க முடியவில்லையே!
நேசத்தோடு இன்று நாம் உம்மை
நினைவு கூருகின்றோம்.
ஆண்டவன் திருப்பாதத்தில் நீர் அமைதி பெறப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மகள், மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

சுன்னாகம் மத்தி,
சுன்னாகம். (90442)

## உதயன்

### அழைப்பு

கட்நாயக்கா விமானப்படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் மற்றும் இன்றைய அரசியல் நிலைவரம் தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் பேசும் தனது முடிவை மாற்றிக் கொண்டு விட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

எதிர்க்கட்சிகளைப் பேச்சுக்கு வருமாறு கோரி அவரது சார்பில் அவரது செயலாளர் கடிதங்களை அனுப்பி ஓரிரு நாள்களுக்குள்ளேயே - கையைச் சுட்டுக்கொண்டு - சந்திப்பை ரத்துச் செய்திருக்கின்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதியின் சார்பில் எதிர்க் கட்சிகளுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டபோதே அதைப் பலரும் எள்ளி நகையாடினார்கள்.

அரசுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் முன்வைத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்ட நிலையில், தனது சிறுபான்மை அரசைக் காப்பாற்றுவதற்காக - புதிய அரசு அமைக்கும் பொறுப்பை எதிர்க்கட்சிகளிடம் ஒப்படைக்கும் தார்மீக, ஜனநாயகப் பண்பைப் பேணவேண்டிய இக்கட்டிலிருந்து தப்புவதற்காக - குறுக்கு வழிகளை நாடி, நாடாளுமன்றத்தையே ஒத்திவைத்து, ஜனநாயக ரீதியில் எதிர்க்கட்சிகள் எடுத்த முயற்சியை தார்மீக நெறிமுறைகளுக்கு முரணான விதத்தில் முறியடித்த ஜனாதிபதி -

அதற்கு எதிராக ஜனநாயக - அஹிம்சை - வழியில் எதிர்க்கட்சிகள் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தனது படைகளை ஏவி, பலவந்தமாக அடக்கிய ஜனாதிபதி -

புதிய அரசமைப்பு என்ற படத்தை முன்வைத்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக - எதிர்க்கட்சிகளோடு கலந்தாலோசனை செய்யாமல் - தம்பாட்டில் சர்வஜன வாக்கெடுப்புக்கான பிரகடனத்தை வெளியிட்ட ஜனாதிபதி -

இப்போது தமக்குப் பெரும் நெருக்கடி வந்திருக்கும் போது எதிர்க்கட்சிகளைப் பேச்சுக்கு அழைப்பது வேடிக்கையிலும் வேடிக்கை என்று கூறப்பட்டது.

அதுவும், தலைநகரில் - அதி உச்சப் பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடுருவி, படையினரின் முதுகெலும்பாக இருக்கும் குண்டுவீச்சு விமானங்களையே கூட்டமாகத் தகர்த்தெறிந்து புலிகள் புரிந்திருக்கும் பெரும் நாசத்துக்குப் பின்பும் -

ஏறத்தாழ நாட்டின் பட்ஜெட் அரைவாசித் தொகைக்குச் சமனான மதிப்புக்கு ஒரு விடிகாலைத் தாக்குதலில் பேரழிவைப் புலிகள் செய்துவிட்டுப்போன பின்பும் -

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக உச்ச ஆபத்து ஏற்பட்ட பின்பும் -

தன்னுடைய அரசைக் காப்பாற்றும் ஒரே நோக்கத்துக்காக - இத்தகைய முக்கிய பிரச்சினை குறித்து மக்களின் பிரதிநிகளைக் கொண்ட நாடாளுமன்றத்தைக் கூட்டி ஆராய்வதை விடுத்து, தனித்தனியாகச் சில எதிர்க்கட்சிகளோடு மட்டும் பேசுவதற்கு ஜனாதிபதி அழைத்தபோதே அதைப் பலரும் எள்ளி நகையாடினர்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. தனது தவிசாளர் சரித்த ரத்வத்தையை ஜனாதிபதியுடன் பேச அனுப்பிவைத்தது. ஆனால் அவரைச் சந்திக்க ஜனாதிபதி மறுத்துவிட்டார். தான் எதிர்க்கட்சித் தலைவருடன்தான் பேச விரும்புவதாக அவர் குறிப்பிட்டாராம்.

அப்படியானால் அதைத் தமக்கு எழுத்தில் தரும்படியும், அதற்குத் தாம் உரிய பதில் எழுத்தில் தருவதாகவும் ரணில் பதில் கூறியிருப்பதாகத் தகவல்.

அண்மையில் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இரு தடவைகள் அவரை போய்ச் சந்தித்துக் கலந்துரையாடியதும் - தேசிய அரசில் தனக்குப் பிரதமர் பதவி தந்தால் 41 எம்.பிக்களுடன் தற்போதைய அரசுக்கு ஆதரவு தரத் தான் தயாராக இருப்பதாக இந்தச் சந்திப்பில் ரணில் தம்முடன் பேரம் பேசினார் என்று பின்னர் ஜனாதிபதி ரணில் மீது சேறு அள்ளிப் பூசினார் என்பதும் - தெரிந்தவையே.

தனித்தனி இருவர் நேருக்கு நேர் நடத்திய பேச்சுக்களின் உண்மை விவரம் அவர்கள் இருவருக்கும்தான் தெரியும். அப்படி இருக்க, எதிர்த்தரப்புக்கு - ரணிலுக்கு சேறு அள்ளிப் பூச - அரசியல் உள்நோக்கத்தோடு அந்தச் சந்திப்பைப் பயன்படுத்திய ஜனாதிபதி மீண்டும் எந்த முகத்தோடு ரணிலை பேச்சுக்கு அழைக்கின்றார்?

ஜனாதிபதியின் இந்தப் போக்கினால்தான் எதிர்க்கட்சிகள் அவரது அழைப்பை உதாசீனம் செய்தன என்று கொள்வதும் தவறில்லைப் போலும்.

### சர்வஜன வாக்கெடுப்பு வழக்கு:
# விசாரணை நடத்தும் நீதியரசருக்கு மிரட்டல்!

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கு தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நிஹால் ஜயசிங்க தெரிவித்தார் என சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

உள்ளூராட்சித் தேர்தலுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை சர்வஜன வாக்கெடுப்புக்குப் பயன்படுத்துவதைத் தடை செய்யுமாறு கோரி தி.சடாட்சரம், சி.பி.சமரசேகர ஆகியோர் தாக்கல செய்த மனுக்கள் மீதான விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணையின் போதே நீதியரசர் நிஹால் ஜயசிங்க இவ்வாறு தெரிவித்தார்

இந்த வழக்குகளை விசாரணை செய்ய வேண்டாம் எனப் பல வழிகளிலும் தொடர்ந்து தனக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாகவும் நீதியரசர் தெரிவித்தார்.

இதேபோன்ற பல மனுக்கள் விசாரணையில் உள்ளதால் இந்த மனு மீதான விசாரணையை ஒத்திவைக்கும்படி சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர். இதனை அடுத்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (உ-7)

### கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (ம-10)

☆ ☆ ☆

அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் வலயம் ஒன்றுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டம் ஏற்கனவே அன்றைய தினம் காலை 10 மணிக்கு நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10)

## நாட்டு நடப்பு

கனகசபையர் கனகம்மாவோடு
கனடா புறப்பட்டார் ஒன்றாய்
இனசனம் பிள்ளைகுட்டி விட்டு
ஏகினார் மகன் அழைத்தானென்று
புதுமண தம்பதியர் போலங்கே
பூட்டினான் அறைக்குள் ஒன்றாய்
"இதுபோதும் 'பூதாக்கலம்' எமக்கு
இன்றே அனுப்படா நல்லூர்" என்றார்
புதுப்பூட்டு உடனே வாங்கி
பூட்டினான் கிழட்டை ஒன்றாய்.


*- விகடகவி -*

### தமிழ் மாணவர்களுக்கு எதிரான
# அரச படைகளின் கொடுமைகளை ஆட்சேபித்து கனடாவில் ஆர்ப்பாட்டம்

ஸ்ரீலங்காவில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக அரசும் அரசுடன் இணைந்துள்ள ஆயுதக் குழுக்களும் மேற்கொண்டுவரும் கொடுமைகளை ஆட்சேபித்து கனடாவில் கடந்த புதன் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஒட்டாவாவில் உள்ள கார்ட்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஈழத்தமிழ் மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியபடி மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக கனேடிய கார்ட்டன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்காவில் தமிழ் மாணவர்கள் பலர் அரச படைகளாலும் அரசசார்பு ஆயுதக் குழுக்களாலும கொல்லப்பட்டு வருகின்றனர்.

தமிழ் மாணவர் மீதான நீதியற்ற கொலைகள், கைதுகள், சித்திரவதைகள், காணாமற்போதல்கள் ஆகியன தொடர்பான விவரங்களை சர்வதேச மனித உரிமை அமைப்புக்களான சர்வதேச மன்னிப்புச் சபை, ஏசியா கியூமன் றைட்ஸ் கொமிசன் ஆகியன அண்மைக்காலமாக வெளியிட்டு வந்துள்ளன - என்றுள்ளது. (ம-3)

# பாவையர் தீண்டப் பணிகின்ற பூங்கொம்பை பாவில் வடித்த பைந்தமிழ்ப் பாவலர்!

### இலக்கியச் சோலை

இறைவன் படைப்பு விநோதமானது. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நோக்கிற் படைத்தான் இறைவன். அவன் படைப்புகளில் பெண் மிகவும் மனோரம்மியமானவள். பெண்கள் இல்லாது இலக்கியமேது? பெண்களின் விளையாட்டுக்களில் பூக்கொய்தலும் ஒன்று. அக்காட்சிகள் இலக்கியங்களில் அடிக்கடி வருகின்றன.

இராமன் விசுவாமித்திர முனிவருடன் சென்று மிதிலையில் சிவதனுசை முறித்து சீதையை வெல்கிறான். செய்தி அயோத்திக்குப் பறந்து செல்கிறது. தசரதன் தன் பரிவாரங்களுடன் மிதிலை செல்கிறான். வழியில் சித்திரகூட மலையில் பாடி அமைத்துத் தங்குகிறான். மகளிர் மலர் கொய்து மகிழ்கின்றனர். இதில் கவிச்சக்கரவர்த்தி கம்பர், பெண்களின் நளினம் பற்றிக் கூறும் போது

*நஞ்சினுங் கொடிய நாட்டமமுதென நயந்து நோக்கிச்*
*செஞ்சவே கடைக்கையாற் றீண்டலு நீண்ட கொம்பர்*
*தஞ்சிலம் படியின் மென் பூச்சொரிந்தடன் றாழ்ந்த வென்றால்*
*வஞ்சிபோன் மருங்குலர் மாட்டியாவரே வணங்கலாதார்.*

"விஷத்தைக் காட்டிலும் கொடியதாகிய கண்களையுடைய பெண்கள் அவற்றைக் காண்பவர்கள். அதன் இனிமை காரணமாக அமுதென்று கருதும்படியான விழிகளால் நீண்டு வளர்ந்த பூங்கொம்புகளை தமது தாமரை போன்ற கைகளாற் பிடித்துத் தாழ்த்தியவுடனேயே அக்கொம்பர்கள் மென்மையான மலர்களை அழகிய சிலம்பணிந்த அவர்களது பாதங்களிலே சொரிந்து காலடியில் வீழ்ந்துவிடுகின்றன. இப்படி அஃறிணைப் பொருள்களாகிய பூங்கொம்புகளே பெண் களிடத்திற் சரணாகதி அடையுமென்றால் வஞ்சிக்கொடி போன்ற இடையுடைய பெண்களின் பால் வணங்கி நிற்காதார் யாருளர்" என்று வினவுகிறார்.

இதே கருத்தை நளவெண்பாவில் புகழேந்தி இப்படிக் கூறுகிறார். சுயம்வரம் முடிந்து தமயந்தியுடனும் தனது நாடான நிடதத்திற்குச் செல்கிறான் நளன் தலைநகரான மாவிந்தமருகில் வரும்போது ஒரு பூஞ்சோலையில் பெண்கள் மலர் கொய்து கொண்டிருக்கிறார்கள். இதனை நளன் தமயந்திக்குக் காட்டுகிறான். மகளிர் தமது கையால் பூங்கொம்பர்களைத் தாழ்த்தி மலர் கொய்வதை-

*"பாவையர் கைதீண்டிற் பணியாதார் யாவரே அப்*
*பூவையர் கை தீண்டலும் பூங்கொம்பு - மேவியவர்*
*பொன்னடியிற் றாழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்*
*மின்னடு வேற்கையான் விரைந்து"*

மின்னல் வேகத்திற் வேல் எறியும் திறன் படைத்த நளன் தனது மனையாளாகிய தமையந்தியை நோக்கி

"பெண்களின் கரம் பட்டால் அதற்கு அடங்கி நடக்காதவர் யார்தான் உளர்? நாகணவாய்ப் புள் போன்ற நளினமுடைய பெண்களின் கை பட்டதுமே அஃறிணைப் பொருளாகிய பூங்கொம்பே உடனே மதி மயங்கி அப் பெண்களின் பொன்போன்ற பாதங்களில் சரணாகதியடைந்து விட்டது. எனவே ஏனையவர்களின் கதி என்ன? எண்ணிப் பார்ப்பாயாக" என்கிறான்.

இதற்கெல்லாம் சமாதானம் கூறுகிறார் கம்பர்.

*அம்புயத் தணங்கினன்னா ரம்மலர்க் கைகடீண்ட*
*வம்பிய வலங்கற் பங்கி வாளரி மருளும் கோளார்*
*தம்புய வரைகள் வந்து தாழ்வன தளிர்த மென்பூங்*
*கொம்புகள் தாழுமென்றல் கூறலாந் தகைமைத் தொன்றோ*

"தாமரை மலரில் வாழ்கின்ற இலட்சுமியையொத்த மகளிரின் கைகள் தீண்ட, சிங்கம் போன்ற பெரு வலிமையுடைய ஆடவரே தம் வயமிழந்து அம் மகளிரைத் தாழ்ந்து வணங்குவரென்றால் மிகவும் மென்மையான இப் பூங்கொம்புகள் இந்த மெல்லடியார்களான பெண்களின் பாதத்தே தாழ்ந்து வணங்குதலில் என்ன புதுமை இருக்கிறது" என்கிறான்.

*"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மையுண்டாகப் பெறின்"* என்று கூறி இப்படியான இனிமை நிறைந்த பெண்களுக்கு நிறைவு வேண்டின கற்பு என்னும் 'நிறை' வேண்டும் என்கிறார்.

**உதங்கா**

### விளையாட்டு நிகழ்வு

கோண்டாவில்,ஜூலை29

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப்போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மரதன் ஓட்டப் போட்டி நல்லூர் பிரதேச சபை தலைமையகதத்தின் முன்பு இருந்து ஆரம்பமாகவுள்ளது.(ம-86)

### நாளை

ஆடி 14
திங்கட்கிழமை
திதி: தசமி
காலை 07.11 வரை.
நட்சத்திரம் : அனுஷம்
பிற்பகல் 2.18 வரை.
சுபநேரம் : 12.03 - 1.33
ராகுகாலம் : 07.33 - 09.03
(பழைய நேரப்படி)

### விவரங்களைப் பதியக் கோரிக்கை

சுன்னாகம்,ஜூலை29

அண்மைக்கால அசம்பாவிதங்களால் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கைதடிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக உடுவில் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் குடும்பங்கள் இதுவரை மீளக்குடியேறாவிடின் அதுபற்றிய விவரங்களைத் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் கிராம அலுவலர்களுக்கு அறிவிக்குமாறு உடுவில் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவிப்பதன் மூலம் ஜூலை மாத உலர் உணவு நிவாரணம் பெறுவதை உறுதிப்படுத்தும்படி அவர் கேட்டுள்ளார். (ஜ-27)

### உதயவாக்கு

தன்னையே ஏமாற்றிக் கொள்பவனே அதிகம் ஏமாற்றப்பட்டவனாவான்.

### கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம் !



# வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் தரம் II பிரிவு “ஆ”வகுப்பிற்கான ஆள்சேர்ப்பு - 2001

**வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் தரம் II பிரிவு “ஆ”வகுப்பிற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண் - பெண் இருபாலாரிடமுமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 27.08.2001 ஆகும்.**

குறிப்பு

இப்பதவிக்குரிய வெற்றிடங்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா அம்பாறை, திருகோணமலை, ஆகிய மாவட்டங்களில் காணப்படுவதனால் அவ்அவ்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து அவ்அவ்மாவட்டங்களில் நியமனம் வழங்கப்படும்.

**02. சேவை நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பொறுபவர்கள் விதவைகள் அநாதைகள்/தபுதார் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.
2. இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம்**

பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (iii) இற்கு அமைவாக
ரூபா 54,480 - 9 X 1,320 - 8 X 1,560 - 78,840 (T-2-2) ஆகும்.

**04. தகைமைகள்**

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும், நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுதிகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க சேவையில்/ மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும் அதாவது இவ் விண்ணப்ப முடிவுதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளிலாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். எனினும் அவர்கள் தமது தற்போதைய தற்காலிகமான வதிவிடத்தை நிரந்தர வதிவிடம் எனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும், நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

**உ. கல்வித்தகைமை**

I. க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி/சிங்களமொழி அத்துடன் எண்கணிதம்/கணிதம்/ வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும்.

அல்லது

தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி/சிங்களமொழி அத்துடன் எண்கணிதம்/கணிதம் வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களில் "B"திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டும்

அத்துடன்

- கல்விப் பொதுத்தராதரப் (உயர்தர) பரீட்சையில் ஒரேதடவையில் 04 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

II. மேலே உ I குறிப்பிட்ட கல்விப் பொதுத்தராதர (சா/த) அல்லது தேசிய கல்வி பொதுத்தராதர பரீட்சை தகைமையுடன் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தலுடன் திருகோணமலை/பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியினால் வழங்கப்பட்ட கூட்டுறவு உயர்தர அல்லது முகாமையியல் டிப்பிளோமா பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:

இவ்விண்ணப்ப முடிவுதிகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**05. ஆள்சேர்ப்பு முறை:**

I. அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத்திட்டம் அரசு சுற்றுநிருபங்களுக்கு அமைவாக எழுத்துப்பரீட்சைக்கு தகுதியானவர்கள், நேர்முகப்பரீட்சை என்பவற்றின் முன்னுரிமை அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்யப்படும் எழுத்து பரீட்சை நடத்துவது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்.

II. நிலவும் வெற்றிடங்களில் 3 வீதம் வலது குறைந்த நபர்களுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறுகின்ற வலது குறைந்த நபர்களின் கூடிய புள்ளி மட்டத்தை அடைகின்ற 3 வீதமானவர்கள் நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுபவர். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் குறைந்தபட்சம் 40 சதவீதமாவது ஆகல் வேண்டும். நியமனத்துக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியொருவர் தனது வலது குறைந்த நிலையையும் சம்பந்தப்பட்ட பதவியில் கடமையாற்றுவதற்காக அது தடையாக இராது என்பதையும் மருத்துவ நிபுணரொருவரின் அறிக்கை மூலம் உறுதிப்படுத்தவேண்டும்.

**06. எழுத்துப்பரீட்சை**

இப்பரீட்சை தமிழ்/சிங்களம் ஆகிய இரு மொழிமூலங்களிலும் நடத்தப்படும். இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு

**1. பொது விவேகமும் உளச்சார்பும் -**

*ஒரு (1) மணித்தியாலம் - 100 புள்ளிகள*

விண்ணப்பதாரியின் எண்கணிப்புத்திறன், பிரச்சினைகளுக்கான தீர்வுகாண் திறன் தர்க்க முறையிலான சிந்தனை, பொதுவிவேகம் ஆகியவற்றைக் கணிக்கும் வகையிலான குறுகிய வினாக்களைக் கொண்டதாக அமையும்.

**2. பொது அறிவு -**

*ஒன்றரை (1 1/2) மணித்தியாலம் - 100 புள்ளிகள்*

இலங்கையின் கூட்டுறவு இயக்கம், சர்வதேச கூட்டுறவு இயக்கம், கூட்டுறவு அபிவிருத்தியும், சனசமூக அபிவிருத்தியும், கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்துவம், கூட்டுறவு இயக்கத்தின் புதிய திருப்பம், தேசிய சர்வதேச தற்கால செய்திகள், சமூகப் பொருளாதார நிகழ்வுகள், ஆகியவற்றை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டிருக்கும்.

**07. பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரி தாம் வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/- ஐச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை பெற்று அதனை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 ஆம்இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக் கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 200/- ஐச் செயலாளர், மாதாணப பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலை என்ற பெயருக்கு காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்

**08 விண்ணப்பிக்கும் முறை:**

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கமைவாக ஏ4 அளவிலான (21செ.மீ. X 29 செ.மீ.) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத்தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 2001 .08.27ஆம் திகதிக்கு முன்னர், செயலாளர், மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, இல. 35, மக்கெயிசர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது மேல் மூலையில் "வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் கூட்டுறவு சங்கங்களின் பரிசோதகர் தரம் II பிரிவு 'ஆ'வகுப்பிற்கு ஆள்சேர்ப்பு 2001" என்று பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்கு தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்குக் குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்கப் பெறாவிடின் அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

**09. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:**

| நகரம் | | எண் | நகரம் | | எண் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 1 | திருகோணமலை | - | 6 |
| மன்னார் | - | 2 | மட்டக்களப்பு | - | 7 |
| வவுனியா | - | 3 | அம்பாறை | - | 8 |
| கிளிநொச்சி | - | 4 | கல்முனை | - | 9 |
| முல்லைத்தீவு | - | 5 | | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப் பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**திருமதி க.சிவசிதம்பரம்,**
செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு-கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(C/17607)

மாதிரி விண்ணப்பப் படிவம்
8 ஆம் பக்கத்தில்

# இனப்பிரச்சினைக்கு இனியும் தீர்வு காணத்தவறினால் நாடு சின்னாபின்னமாகிச் சீரழிந்து நாசமாகி விடும்!

## கூட்டணியின் மட்டு. எம்.பி. ஜோசப் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூலை29

இலங்கையில் நடைபெறும் போர் நாட்டைக் கைப்பற்றுவதற்காக ஆயுதம் தாங்கிய புரட்சிவாதிகளைக் கொண்டவர்களின் பயங்கரவாதப் போராட்டமா அல்லது ஆட்சிப்பீடத்தின் அதிகாரப்போக்கினால் அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம் தமது விடுதலைக்காக நடத்தும் போராட்டமா என்பதைத் தீர்மானித்து அதற்கேற்றபடி நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கான காலம் வந்துவிட்டது. இனியும் இனப்பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணப்படாவிட்டால் நாட்டு மக்களும் நாடும் சின்னாபின்னமாகிச் சீரழிந்து நாசமாகிப் போகும் நிலை ஏற்பட்டுவிடும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கட்டுநாயக்கா விமானப்படைத் தளத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆளும்கட்சியும் மற்றும் பெரும்பான்மையினரின் அரசியல் கட்சிகளும் பேரினவாத பத்திரிகைகளிலிருந்தும் வெளிவரும் அபிப்பிராயப் பிரசாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதம் என்பது இன்று ஆளும் கட்சியினராலும், சிங்கள அரசியல்வாதிகளாலும், பேரினவாதிகளாலும் கூறப்படும் ஒரு பதமாகும். தமிழ் இளைஞர்களின் போராட்டம் எப்படி; எதனால் ஏற்பட்டது என்பதை இனியாவது தெரிந்து கொண்டால், இனப்பிரச்சினைக்குத் தீர்வாகப் போர் புரிவதை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முற்படுவார்கள்.

விடுதலைப் போராட்டங்களைப் பயங்கரவாதம் என அந்நிய ஆட்சியினர் சித்திரித்து அடக்குமுறையைக் கையாண்ட காலம் மறைந்துவிட்டது. இனியும் இதே பழைய பாணியை இலங்கை அரசு பின்பற்றத் தொடர்ந்து முயற்சித்தால் நாட்டுக்கு தீங்குதான் ஏற்படும். கட்டுநாயக்காவில் விடுதலைப் போராளிகள் நடத்திய தாக்குதல் போன்று வேறு பல தாக்குதல்கள் உலகில் நடைபெற்றிருக்கின்றன. கட்டுநாயக்காவில் நடந்த தாக்குதல் காரணமாக அங்கு கடமையாற்றிய ஊழியர்களுக்கோ அல்லது உல்லாசப் பயணிகளுக்கோ எந்தத் தீங்கும் ஏற்படவில்லை.

வடக்கிலும் கிழக்கிலும் தேவாலயங்கள், பாடசாலைகள், அகதி முகாம்கள் மீது குண்டுவீசித் தாக்கிய விமானங்கள்தான் அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றன. இது நாட்டின் பொருளாதாரத்திற்கும் நாட்டு மக்களுக்கும் கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பது உண்மையே. ஆனாலும் பேரினவாதிகளும் பேரினவாத அரசியல்வாதிகளும் கூறுவது போன்று பயங்கரவாதிகளாக இருந்தால் உல்லாசப் பயணிகளையும் பொதுமக்களையும் பற்றி கவலைப்படாமல் அழித்திருப்பார்கள்.

எனவே இந்நிலையை அரசாங்கம் மட்டுமல்ல சிங்கள அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் நாட்டின் நலன் கருதி பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வுகாண இனியாவது முன்வரவேண்டியது அவசியமாகும். விடுதலைப் போராளிகளா? விடுதலை விரும்பிகளா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியது சிங்கள அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் பெரும்பான்மை சமுகத்தைச் சேர்ந்த மக்களும்தான் என்று ஜோசப் பரராஜசிங்கம் மேலும் தெரிவித்தார். (க)

### தென்மராட்சி மாணவருக்கான சீருடைத்துணிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை29

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராயில் இயங்கும் நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் வைத்து அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி வலயப் பகுதியில் இயங்கும் தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் அதே தினங்களில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் -

வலிகாமம் பகுதியில் இயங்கும் தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் நாளை திங்கட்கிழமை உரும்பிராயில் இயங்கும் நாவற்குழி மகாவித்தியாலயத்திலும்-

வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

# மற்றொரு விமானப்படை சிப்பாயும் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது

கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதல் தொடர்பாக விமானப்படையைச் சேர்ந்த மற்றும் ஒரு சிப்பாய் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை அதிகாரிகள் தெரிவித்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்வதற்கு பிரஸ்தாப சிப்பாய் உதவினாரா என்பது தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விமானப் படையைச் சேர்ந்த இருவர் ஊர் மக்களின் சில தகவல்களின் பேரில் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

இதேவேளை - தற்போதைய நிலைமையை அடுத்து ஸ்ரீலங்கா ஏயர் லைன்ஸ் நிறுவனம் அதன் செயற்பாட்டு நிலையங்களை டுபாய்க்கும் சிங்கப்பூருக்கும் இடம் மாற்றியுள்ளது.

ஐரோப்பாவில் இருந்தும் தூர கிழக்கு நாடுகளில் இருந்தும் விமான சேவைகளை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாலேயே டுபாய்க்கும் சிங்கப்பூருக்கும் செயற்பாட்டுத்தளம் மாற்றப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸின் தலைமை ஆளணி அதிகாரி பீற்றர் ஹில் தெரிவித்துள்ளார். (க-3-4)

### கோபி அனான் கண்டனம்

நியூயோர்க்,ஜூலை29

கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தளம் மீதான தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையானது ஒரு பயங்கரவாதச் செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(க-4)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

29-07-2001




இலக்கணாவத்தை, உடுப்பிட்டியைச் சேர்ந்த
நாகேந்திரராஜா ~ காமினி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**கிஜித்**

*தனது முதலாவது பிறந்த நாளை இன்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். கஜித்தை இலக்கணாவத்தையில் இருக்கும் அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டா, மாமாமார், சித்தி, அத்தைமார், மச்சான், மச்சாள்மார் மற்றும் சுவிஸ் – பெரியமாமா, ஜேர்மன் சின்னமாமா, கனடா – சித்தி, சித்தப்பா, தாவடியில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை மற்றும் இணுவிலில் இருக்கும் பெரியப்பா குடும்பம், வவுனியாவில் இருக்கும் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இலக்கணாவத்தை கற்பக விநாயகர் அருள் பெற்று, சீரும் சிறப்புடனும் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வென மனமார வாழ்த்துகின்றார்கள்.*

*இலக்கணாவத்தை,*
*உடுப்பிட்டி.* (90466)

தகவல்:
மாமா - நிருபனி

## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



எமது கோரிக்கைகளை ஏற்று, யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் ஆங்கில மொழி ஆய்வுகூட உருவாக்கத்திற்கும், நூலக அபிவிருத்திக்கும், தனது அமைச்சின் மூலம் நிதி உதவி வழங்கிய மாண்புமிகு கௌரவ அமைச்சர் K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணியை நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதுடன், எமது சந்திப்புகளின் போது எமக்கு உதவி புரிந்த திரு. கிருபன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆங்கில தேசிய டிப்ளோமா
மாணவர்கள்
NDE CIRCLE
உயர் தொழில் நுட்ப நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(90534)

## முதலாம் வருட நெஞ்சகலா நினைவலைகள்

மண்ணில்
09 - 01 - 1946



விண்ணில்
09 - 08 - 2000

### அமரர் சுப்பிரமணியம் சின்னராசா

*(கிளை முகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்)*

**திதி: 2001.07.29**

**பாசத்தோடு எமை அரவணைத்து - நெறிப்படுத்திய**
**தெய்வத்துள் தெய்வமான குல விளக்கே!**
**உங்களைப் போல் தெய்வம் ஒன்றை**
**தேட முடியாதப்பா கோடி தவமிருந்தாலும்!**

**- குடும்பத்தினர்.**

நிரந்தர முகவரி:
"திருத்தணிகை"
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (90394)

தற்காலிக முகவரி:
மூத்த விநாயகர் கோயிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி

சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கலை, கலாசாரபீடம்**

1) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்: I/II/ விரிவுரையாளர் (தகுதிகாண்) / தற்காலிக உதவி விரிவுரையாளர்/ தற்காலிக போதனாசிரியர் - கர்நாடக சங்கீதம்.
2) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/II/ விரிவுரையாளர் (தகுதிகாண்) / தற்காலிக உதவி விரிவுரையாளர்/ தற்காலிக போதனாசிரியர் - பரதநாட்டியம்.

**சம்பள அளவுத்திட்டம்**

| | |
|---|---|
| 1. *சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I {B-03 (A)}* | : Rs 21,500 - 8x475 - 25,300/- மாதமொன்றுக்கு |
| 2. *சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II {B-03}* | : Rs 18,325 - 5x475 - 20,700/- மாதமொன்றுக்கு |
| 3. *விரிவுரையாளர் (தகுதிகாண்) {B-04}* | : Rs 11,820 - 10x375 - 15,570/- மாதமொன்றுக்கு |
| 4. *தற்காலிக உதவி விரிவுரையாளர்:* | : Rs 10,800/- மாதமொன்றிற்கு (நிலையானது) |
| 5. *தற்காலிக போதனாசிரியர்* | : Rs 8,715/- மாதமொன்றிற்கு (நிலையானது) |

அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்).

**வயதெல்லை:** 45 இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
(அரச திணைக்களங்கள், நியதிச் சபைகள், அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல)

விண்ணப்பப் படிவங்களையும், வேண்டப்படும் கல்வித் தகைமைகளைக் கொண்ட விவரங்களையும் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பெற விரும்புவோர், படிவமொன்றிற்கு, செங்கலடி தபால் நிலையத்தில் மாற்றத்தக்கதாக ரூபா 20/- பெறுமதி கொண்ட தபாற்கட்டளை அல்லது காசுக்கட்டளையைச் செலுத்துவதன் மூலம் உதவிப் பதிவாளர்/தாபனங்கள், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தபால்கட்டளை அல்லது காசுக்கட்டளை "நிதியாளர்" கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை என்ற பெயரில் எடுக்கப்படல் வேண்டும். தபாலில் விபரங்களைப் பெறவிரும்புவோர் இதனுடன் சுயவிலாசமிடப்பட்ட, முத்திரை ஒட்டிய 23x10cm அளவிலான தபாலுறை ஒன்றினை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பிற உயர்கல்வி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், அரச திணைக்களங்கள், நியதிச்சபைகள் என்பவற்றில் கடமைபுரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவரின் ஊடாகவே அனுப்பிவைத்தல் வேண்டும். ஆயினும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முற் பிரதிகளை நேரடியாக அனுப்பிவைக்கலாம். எவ்வாறாயினும் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக மூலப்பிரதிகளை அனுப்பத்தவறும் விண்ணப்பதாரிகள் எவரும் நியமனத்திற்கு கருத்திற்கொள்ளப்படமாட்டார்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 27-08-2001 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக உதவிப் பதிவாளர்/தாபனங்கள், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

- **பதில் பதிவாளர்.**

*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,*
*வந்தாறுமூலை, செங்கலடி. 24.07.2001* (க/17593)

## சமுர்த்தி ஊழியருக்கு நிரந்தர நியமனம்

சுன்னாகம்,ஜுலை29

வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் கடமை புரிந்த 21 சமுர்த்தி ஊககுவிப்பாளருக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது. (ஐ-27)

## சமய அறிவுப் போட்டி முடிவு

கோப்பாய்,ஜுலை29

நீர்வை மாசிவன் ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் உற்சவத்தின் போது ஆலய நிர்வாக சபையினரால் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

*கீழ்ப்பிரிவு*

முதலாம் இடம்:- க.சாயினி (கோப்பாய் மகளிர் உயர்தரப் பாடசாலை). இரண்டாம் இடம்:- அ.திவ்வியா (நீர்வேலி, சி.சி.த.க.பாடசாலை), மூன்றாம் இடம்:- க.கிருசாந்தன் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி).

*மேற்பிரிவு*

முதலாம் இடம்:- ந.சுகந்தா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்:- ஜெ.வனிதா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), மூன்றாம் இடம்:- த.மோகனப்பிரியா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

(க-72)

## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் கீழ்க்காணும் ... ளுக்கு அனுமதி பெற்றுத்தரப்படும்.

1. மருத்துவம் (ஆங்கிலம்) 2. பொறியியல் (ஆங்கிலம்) 3. கணனியியல (ஆங்கிலம்)

விரும்புபவர்கள் நேரிலோ, கடிதம் மூலமோ உடன் தொடர்புகொள்ளவும்.

Dr.க.சிவனடியான்,
நவாலி,
மானிப்பாய்.

(90511)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 08 - 03 - 1922



உதிர்வு 29 - 06 - 2001

### திருமதி குழந்தை அன்னம்மா

**எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு, எம் துயரில் கலந்துகொண்டு, இறுதிக்கிரியைகளின் போது பல வகையிலும், உதவி புரிந்து எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாநகரசபை முதல்வர், பிரதி முதல்வர், உறுப்பினர்கள், யாழ்.மாநகர சபை நீர்வேலைப்பகுதி பொறியியலாளர், மேற்பார்வையாளர், சகஊழியர் அனைவருக்கும் எமது நன்றியறிதலைக் கூறுவதோடு,

இன்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*167/5, 2ஆம் ஒழுங்கை,*
*அரசடி வீதி,*
*நல்லூர்.*

அன்னாரின்
குடும்பத்தினரும்,
மகன்- கு.சோதிராசாவும்
(மாநகரசபை ஊழியர்)

(90545)

## யாழ்: ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் ஸ்தாபனத்தாரின் மாபெரும் ஆடிமாத சிறப்புத் தள்ளுபடி

**சாறி வகைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரசியன் சாறி | ~~1200~~ | - 800/= | பட்டுக்காஞ்சிபுரம் | ~~3300~~ | - 2800/= |
| நிலாக் சாறி | ~~1000~~ | -750/= | பஞ்சாபி வகைகள் | ~~1000~~ | - 800/= |
| ஹொப்பர் சில்க் சாறி | ~~1250~~ | - 950/= | பெரிய கவுண் | ~~1200~~ | - 850/= |
| மேர்க்குறி சாறி | ~~1300~~ | - 1050/= | சிறிய கவுண் | ~~750~~ | - 550/= |
| ஜப்பான் சாறி வகைகள் | ~~950~~ | - 750/= | சிறிய ஸ்கேட் பிளவ்ஸ் | ~~880~~ | - 500/= |
| சிறிய ஸ்கேட் பிளவ்ஸ் | ~~600~~ | - 450/= | | | |

| சேட் வகைகள் | | | ஸ்கேட்ஸ் அன் பிளவ்ஸ் | | |
|---|---|---|---|---|---|
| பொக்ஸ் சேட் | ~~825~~ | - 700/= | பெரிய ஸ்கேட் அன் பிளவ்ஸ் | ~~1000~~ | - 700/= |
| " | ~~800~~ | - 650/= | " " | ~~750~~ | - 600/= |
| " | ~~400~~ | - 300/= | " " | ~~1200~~ | - 900/= |
| " | ~~750~~ | - 600/= | பெரிய வெல்வெற் ஸ்கேட் | | |
| " | ~~700~~ | - 550/= | அன் பிளவ்ஸ் | ~~1000~~ | - 850/= |

**துணி வகைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வெல்வெற் பிளேன் பிறின்ற் | ~~275~~ | - 210/= | ரைற்றானிக் பிறின்ரட் | ~~140~~ | - 110/= |
| பட்டர் சில்க் பிறின்ற் | ~~130~~ | - 120/= | ரைற்றானிக் பிளேன் | ~~130~~ | - 110/= |
| டயானாப் பிறின்ற் | ~~110~~ | - 100/= | பட்டர் சில்க் பிளேன் | ~~80~~ | - 70/= |
| சலஞ்சர் பிளேன் | ~~80~~ | - 70/= | சீத்தை (சைனா) | ~~60~~ | - 50/= |
| | | | சீத்தை (சைனா) | ~~50~~ | - 40/= |

**சூட்டிங்ஸ்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| றேக் பிளேன் | ~~390~~ | - 325/= | ரைற்றானிக் சூட்டிங் | ~~400~~ | - 350/= |

*மற்றும் சகலவிதமான புடைவைத் தினுசுகளும் மலிவு விலையில் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்!*

**ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
18A, நவீன சந்தை,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

***கிளை:*** யோகாஸ் புடைவையகம், யாழ்ப்பாணம்.

(C/17497)

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மாதிரி விண்ணப்பப்படிவம்
## வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் தரம் II பிரிவு "ஆ" வகுப்பிற்கான ஆள்சேர்ப்பு - 2001

சுட்டெண்:- [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

01 முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:- வண/திரு/திருமதி/செல்வி
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
02 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
03. தபால் முகவரி
தமிழில் :-
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-
04. பால்: ஆண்: M / பெண்: F [ ]
05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
தமிழ் T / சிங்களம் S [ ]
06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண் :- [ ]
(9 ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)
07. இனம் :
சிங்களவர் - 1 இந்தியத் தமிழர் - 4
இலங்கைத் தமிழர் - 2 ஏனையவர் - 5 [ ]
முஸ்லீம் - 3
08. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
09. அ) பிறந்த திகதி :- வருடம் : மாதம்: திகதி:
ஆ) 2001 - 08 - 27 ஆந் திகதியன்று
வயது: வருடங்கள்: மாதம்: நாள்கள்:
10. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:-
(2) பிரதேச செயலர் பிரிவு:-
(3) வதியும் கால எல்லை:- தொடக்கம்:- வரை:-
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்திருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம் :-
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்:- மாகாணம்:-
இடம்பெயர்ந்த ஆண்டு:- மாதம்:- திகதி:-
11. தகைமைகள்:-
11. 1) க.பொ.த. (சா/த) அல்லது தே.பொ.த. பரீட்சை:-
ஆண்டு :- சுட்டெண்:-

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

ஆண்டு:- சுட்டெண்:-

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

11. 2) க.பொ.த (உ/த) பரீட்சை:-
ஆண்டு:- சுட்டெண் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11. 3) வேறு தகைமைகள்:-
பொல்கொல்லை/திருகோணமலை கூட்டுறவுப் பாடசாலையினால் நடத்தப்படும் கூட்டுறவு ஊழியர் சான்றிதழ் (உயர்தரம்) அல்லது கூட்டுறவு முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பின் வருடமும் சுட்டெண்ணையும் குறிப்பிடவும்.

12. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

[ ]

13. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட......பிரதேச செயலகத்தின்...... ஆம் இலக்க......ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் , இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கின்றேன் என்றும், மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தித் தன்மையை ரத்துச் செய்வதற்கும் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்

................ ............................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/= இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/ செல்வி-------- என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் --------------- ஆந் திகதி அவர் என்முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ............................
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி:-
முகவரி:-
(பதவி முத்திரை)

15. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரப் பிறப்பிடமாக/ வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும், அவர்------------------ திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ------------------------ மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ............................
திகதி:- பிரதேச செயலாளர்/கிராம சேவகர் கையொப்பம்.

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

# அவசரகாலச் சட்டத்தை நீடிக்காததே புலிகளின் தாக்குதல்களுக்குக் காரணம்

## பிரதமர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,ஜுலை29

அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முடியாமல் போனமையே விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதற்குக் காரணமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா.

அநுராதபுரத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற சர்வஜனவாக்கெடுப்பு தொடர்பான பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாததால் அந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்பை வழங்கி வந்த முப்படையினரும், பொலீஸாரும் இன்று தமது கடமையை நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

இந்தப் பாதுகாப்புக் குறைபாட்டைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துமாறு சிலர் அரசை வற்புறுத்தி வருகின்றனர். தாக்கினால் தொடர்ந்தும் தாக்குதல் நடத்த வேண்டும் என்றும் கூறிவருகின்றனர். எனவே நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முடியாமல் போனமைக்குக் காரணமானவர்கள் அனைவரும் தேசத்துரோகிகளே - என்று பிரதமர் தெரிவித்தார்.(ஐ-7)

# அகதிமுகாம்களில் வாடும் சிறுவர் நிலை; பிரிட்டிஷ் அரசுக்கு விரிவான அறிக்கை

## யாழ். வந்த அதிகாரி சமர்ப்பிப்பார்

மூளாய்,ஜுலை29

யாழ்.மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் வாழும் சிறுவர்களின் அவல நிலை குறித்து பிரிட்டிஷ் அரசுக்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்திருந்த கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரி திருமதி சாரா இவ்விடயம் குறித்து பல்வேறு தகவல்களைச் சேகரித்துள்ளார். கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் மாவட்ட மட்டத்திலான சிறுவர் உரிமைகள் கண்காணிப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் பலர் குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வரும் சிறுவர்களின் அவல நிலை குறித்து பிரிட்டிஷ் தூதரக அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

யாழ்.குடாநாட்டில் நடைபெற்ற பல்வேறு இராணுவ நடவடிக்கைகளின் போது பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் இன்னமும் அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக இந்த அகதிமுகாம்களில் வாழும் சிறுவர்கள் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ளனர். மிகவும் கீழ் நிலையில் காணப்படும் போஷாக்கு மட்டம், மிகக்குறைந்த கல்வி வசதி, மற்றும் திருப்தியற்ற இருப்பிட வசதி, சுகாதாரப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு நெருக்கடிகளை முகாம்களில் வாழும் சிறுவர்கள் நீண்ட காலமாக அனுபவித்து வருகின்றனர். இவ்வாறான விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை பிரிட்டிஷ் அரசுக்குத் தான் சமர்ப்பிக்க இருப்பதாகவும் -

இவ்வாறான நிலைமைகள் குறித்துத் தமக்கு இதற்கு முன்னர் எவரும் தெரியப்படுத்தவில்லை எனவும்-

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் தூதரக அதிகாரி தெரிவித்தார். (ஐ-99)

# ஊர்காவற்றுறைப் பகுதிக்கு மூலதன நன்கொடை நிதி

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள், மகப்பேற்று பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றின் புனரமைப்பு மற்றும் மலசலகூட பராமரிப்பு என்பவற்றிற்காக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் மூலதன நன்கொடை நிதியாக ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந.மதனராஜா தெரிவித்தார்.

இந்த நிதியில் இருந்து பிரதேச சபை எல்லைக்குள் பதிவு செய்யப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் 'அ' தரத்தைச் சேர்ந்த 26 சனசமூக நிலையங்களுக்கு 32 ஆயிரத்து 500 ரூபாவும் 'ஆ' தரத்தைச் சேர்ந்த 4 சனசமூக நிலையங்களுககு 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பொது நூலகங்களுக்கான நன்கொடையாக 18 ஆயிரம் ரூபாவும் மகப்பேற்று பிள்ளைகள் பராமரிப்பு நிலைய நன்கொடையாக 60 ஆயிரம் ரூபாவும், மலசலகூட பராமரிப்புக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (ஐ-7-16)

# பொன்னாலை பெருமாள் ஆலயத்தின் கட்டடங்கள் படையினர் பாவனையில்

## வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மூளாய்,ஜுலை29

பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயத்துக்குச் சொந்தமான கட்டடங்களில் இருந்து கடற்படையினரை வெளியேறுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் முகாம் அமைத்துள்ள கடற்படையினர் ஆலயத்தை அண்டியுள்ள - ஆலயத்துக்குச் சொந்தமான - பல கட்டடங்களை தம்வசமாக்கிப் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் -

இதனால் ஆலயத்தின் புனிதத்தன் மைக்கு ஊறு ஏற்பட்டுள்ளதாகவும் -

அத்துடன் ஆலயச் சூழல் மாசடைந்து வருவதாகவும் -

சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆலயத்துக்கு வழிபாடு செய்ய வரும் பக்தர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்த பின்னரே ஆலய தரிசனம் செய்ய முடிகின்றது என்று கூறப்படுகிறது.

இவ்விடயம் குறித்து வலிகாமம் மேற்கு பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆலயத்துக்குச் சொந்தமான கட்டடங்களைக் கடற்படையினரிடமிருந்து விடுவிப்பது தொடர்பாகவும் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரிடமும் இது தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ஐ-99)

# சாந்திகம் உளநலப் பயிற்சி நெறி 'யுனிசெவ்' உதவியுடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜுலை29

சாந்திகத்தின் சமூக உளநல நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உளநலப் பயிற்றுவிப்பாளருக்கான பயிற்சிநெறி {TRAINING OF TRAINERS (TOT) IN PSYCHOSOCIAL WORK} நாளை திங்கள் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சிக்கான பயிற்சியாளர்கள் ஏற்கனவே பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பின்னர் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 20 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி ஒன்பது மாதகாலம் நடைபெறும். மதிப்பீட்டின் பின்னர் இவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். பின்னர் இவர்கள் உளநலப் பயிற்றுவிப்பாளராக, சமூக மட்டத்தில் பல துறைகளிலும் செயற்படுவார்கள்.

உளநலம் குன்றியோரை ஆரம்பத்திலேயே அவதானித்து, உரிய உளவளத்துணையை அளிப்பதன் மூலம் அவர்களைக் குணமாக்கிவிடலாம். இதற்குத் தேவையான உளவளத் துணையாளர்கள் பற்றாக்குறை இருப்பதால் பயிற்றுவிப்பாளர்களின் சேவை மிகவும் அவசியமான தேவையாக இருக்கிறது - என்று 'சாந்திகம்' அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

## விளையாட்டு விழா


யாழ்ப்பாணம்,ஜுலை29

திருநெல்வேலி முடமாவடி ஞானக் குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முடமாவடி ஞானவைரவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.மோகனேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பூங்கனிச் சோலை உரிமையாளர் சிபத்ர் குணசீலன் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக பாலர் கல்விக் கழகத் தலைவர் இ.தவகோபால், செயலாளர் திருமதி தெ. இரட்ணகோபால் ஆகியோரும் கலந்து கொள்வர்.

பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி ஜெயமாலினி தங்கராஜா நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார். (ஐ-7)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



## அடியவர் உனக்கே ஆளப்பா!

சக்திய ரூபன் வேலவனே சகலமு முணர்த்தும்
தத்துவனே
நித்திய வாழ்க்கை அருள்வேலனே நீதியின்
வடிவாய் வளர்வோனே
ஆனந்த ரூபா வேலப்பா அடியேன்
வாழ்க்கை பொய்யப்பா
ஆதலினா லெமைஆளப்பா அடியவர்
உனக்கே ஆளப்பா
புழுவிநைங்கடையேன் உன்னாலே
புண்ணியம் பெற்றேன் தன்னாலே
வழியிலில் வருவாய் முன்னாலே வருவோம்
நல்லை இன்னாளே!

கவிஞர் கந்தமுருகேசதாசன்.

## நித்தமும் பணிகின்றேன் நல்லையனே

*ராகம்:- வசந்தா*
*தாளம்:- ஆதி*

பல்லவி

முத்தமிழ் வடிவேயென் முருகையனே - உனை
நித்தமும் பணிகின்றேன் நல்லையனே - வளர்
(முத்தமிழ்.....)

அனுபல்லவி

எத்திசையும் போற்றும் நல்லையிலே - அருட்
சித்தர்கள் சூழ்கின்ற நல்லையிலே - உயர்
(முத்தமிழ்.....)

சரணம்

தித்திக்கும் தமிழிலே பாட்டிசைத்தேன் - அதில்
சித்திக்கும் தமிழிசை சேர்த்திசைத்தேன் - உனை
எத்திக்கும் துதிக்கவே வாழ்த்திசைத்தேன் - இந்தப்
பித்தர்க்குன் அருளையே கேட்டிசைத்தேன் - முருகா
(முத்தமிழ்.....)

- ச.முருகையா -

## நல்லூரான் அருளை நாடு!

நல்லூரான் அருளை நாளும் நாடு
நல்வாழ்வை நீ உனக்குத் தேடு
அல்லல்களை அவனிடத்தில் கூறு அந்த
ஆறுமுகன் அருளில் நீயும் ஆறு
(நல்லூரான்)

கந்தனென்று கைகுவித்துப் பாடி
காணவருவோர்களை நாடி
சொந்தமென்றும் அந்தவடிவேலன் பெரும்
சுகமளிப்பான் சக்தி உமை பாலன்
(நல்லூரான்)

தந்தைக்குபதேசம் செய்த மைந்தன்
தந்திடுவான் நல் அறிவைக் கந்தன்
முந்தைவினை யாவும் உனை நீங்கும் அந்த
முழுமதிபோல் உன்வாழ்வு ஓங்கும்
(நல்லூரான்)

சூரர்பகை தீர்த்து நின்ற குமரன்
சூழும் இருள் நீக்கும் நல்லூர் முருகன்
பாரில் துணை யார் நமக்குச் சொல்லு அந்த
பரமசிவன் மைந்தனிடம் செல்லு
(நல்லூரான்)

- பா.சிவபாலன் -

## குறைதீர்ப்பாய் குமரேசா!

நல்லூர்ப் பெரும் பதியினிலே
நம் கந்தனுக்கு ஒரு பெருவிழாவாம்
நம்பி வந்த அடியார் குறை போக்கி
நற்பலன் அளித்திடும் வேலவா!
நலிவுற்றோர் குறைதீர்ப்பாய் குமரேசா!
நல்லைக்கந்தன் தாழ் பணிந்திட்டால்
நல்வினைகள் எமைச் சூழ்ந்திடுமே!

- கொழும்புத்துறை பகீரதன் -

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இணுவிலைச் சேர்ந்த திருஞான சமபந்தர் சாந்தி என்பவரது தேசிய அ. அட்டை (இல.808321823V), விசேட அ.அட்டை (இல.0906024761) என்பன யாழ்ப்பாணத்துக்கும் இணுவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இணுவில் வடகிழக்கு (J/190) கிராமசேவையாளர் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். (90557)

சபாபதி வீதி, கொக்குவிலைச் சேர்ந்த சண்முகராஜா சறோஜினி தேவி என்பவருடைய தே.அ.அட்டை (இல.467011987V), விசேட அ.அட்டை (இல.0902026624) என்பன பூநாறி மரத்தடிக்கும் தட்டாதெருச்சந்தி ஊடாக கந்தர்மடத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் அல்லது திருமால் அச்சகம், K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்துதவவும். (90536)

கைதடி கிழக்கு, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த, முருகையா பொன்னம்மா என்பவருடைய தேசிய அ.அ.(இல.495800466V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (90524)

செல்வபுரம்உரும்பிராய் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வரத்தினம் ஜெயக்குமார் என்பவரது தேசிய அ.அட்டை (இல.810884045V) விசேட அ.அட்டை (0903038587) என்பன யாழ்.கன்னாதிட்டி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (90569)

## வீடு வாடகைக்கு

திருக்குடும்பக் கன்னியர்மடம், பரியோவான், பத்திரிசியார், யாழ். செயலகம் ஆகியவற்றுக்கு அண்மித்ததாக வாகனத்தரிப்பு வசதியுள்ள மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: விள. இல.1343, மே/பா உதயன். (90457)

## ஒட்டோ விற்பனைக்கு

15ஸ்ரீ நல்ல நிலையிலுள்ள ஒட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- M.ரைற்றர்ஸ், இல.99 கண்டிவீதி (R.D.A அலுவலகத்திற்கு முன்), கச்சேரி, அரியாலை. (90540)

## ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ளSelect -II ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:-N.செந்தில்மணாளன் 'குமரகிரி' ஒடை, அல்வாய் தெற்கு, அல்வாய். (90535)

## தபால் மூலம் /பிரத்தியேக வகுப்புகள்

வகுப்பு 9 தொடக்கம் 11 வரை கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியபாடங்கள், அனுபவ ஆசிரியரால், தனிப்பட்ட ரீதியாகவோ குழுக்களாகவோ ரியூசன் நிலையங்களுக்கு வந்தோ கற்பிக்கப்படும். தபால் மூலம் கற்க விரும்புவோரும் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.1345, மே/பா.உதயன். (90363)

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் தற்காலிகமாகத் தங்குவோருக்கு, முற்பணம் எதுவுமின்றி வாடகைக்கு அறைகள் கொடுக்கப்படும். தொலைபேசி, மருத்துவ சம்பந்தமான உதவிகள், சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம், விசா போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளுவதற்கான உதவிகளும் செய்து தரப்படும். தொடர்பு:- ZAREEN J.P 83,PENIQUICK RD, WELLAWATTA. T.P. 589987 ,587628 (C/17580)

## SPOKEN ENGLISH

ஆங்கிலம் சுலபமான முறையில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயில, கடித மூலமும் பயிற்சி. ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (90487)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் கல்பேட் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. Broiler 1 kg - 150/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். தொடர்பு:- ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P -3529, 2867 (90512)

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (90527)

Prima இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (90562)

## விற்பனைக்குண்டு

கெஸ்ரனர் 1550 றோணியோ மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு 118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (90564)

இரண்டு ஆட்டுக் கடாக்கள் (6 மாதம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 28, பேரின்பநாயகம் வீதி, (கச்சேரிக்கு அண்மையில்), சுண்டுக்குளி. (90565)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்லின கிறேட் டேன் (Grate dane) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- கிழமை நாள்களில் பாலா, 174நாவலர் றோட், (பகவான் பாமசி முன்பாக) யாழ்ப்பாணம். ஞாயிற்றுக்கிழமைகளில் 88/3, கேசாவில் பிள்ளையார் கோயில் றோட், பத்திரகாளி கோயில் லேன், நாச்சிமார் கோயிலடி. (90549)

## வீட்டுப்பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு

4 BURNERS, GRILL AND OVEN - 1990இல் இறக்குமதி செய்யப்பட்ட மின் அடுப்பும், தளபாடங்களும், விற்பனைக்குண்டு. MRS.R.P. CHELLIAH, ELEPHANT VILLA, DARCH ROAD, UDUVIL. (90539)

## 1963 இல் ஆரம்ப வாணி சோதிடம்

கல்வி முன்னேற்றம், காதல் தொழில், வாழ்வு, வெளியூர் பயணம் அறியவும் திருமாங்கல்ய உள்நாட்டு, வெளிநாட்டு ஆண், பெண் சகல இன மதத்திலும் குறிப்புண்டு. நேரில் வரவும். பணியாற்றும் இடம் மு.ப.9-1, (யாழ் 327/16 K.K.S. வீதி), 2-5.30 மணி (நல்லூர் இந்து விடுதிக் கருகில்) வாணிசோதிடம், 22/1, கச்சேரிவீதி, நல்லூர். (90570)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய், கல்வளைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பயன் தருமரங்களுள்ள 3 3/4 பரப்புக் காணியில் நான்கு அறைகளைக் கொண்ட புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு. MRS.R.P. CHELLIAH, ELEPHANT VILLA, DARCH ROAD, UDUVIL. (90538)

## O/L MATHS

புதிய, பழைய பாடத்திட்டத்திற் கமைய ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இது வரை சித்தியடையாதவர்களுக்கும், 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க.ஆறுமுகநாதன, 10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (90507)

## கண்டீர்களா?

வெள்ளைப் புள்ளிகள் கலந்த மண்கலர் ஐசார் இன பசுமாடு, பட்டி பார்த்த வெள்ளை நிற கொம்பு, கன்று ஈனும் பருவம் கொண்டது (4 ஈற்று) 25.07.2001இல் இருந்து காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும் சன்மானம் வழங்கப்படும். 59, சிவன் புது வீதி, நல்லூர். (90553)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் 1968 M.B.-B.S டாக்டர், 1970 M.B.B.S டாக்டர், 1968 எஞ்சினியர், 1971 எஞ்சினியர், 1972 எஞ்சினியர், 1971 B.Com மணமகன்களுக்கு அழகிய மணப்பெண்கள் தேவை. T. சுப்பையா, கிருஷ்ணா திருமண சேவை. செங்குந்தாவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (90552)

## மணமகன் தேவை

கௌரவ கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973இல் பிறந்த ஆசிரியைத் தொழில் புரியும் அழகிய மணமகளுக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு:- விளம்பர இல.1339, மே/பா.உதயன். (90362)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்ப செவ்வாயுள்ள 1967 பட்டதாரியான அழகான பெண்ணுக்கு வெளிநாட்டு மணமகனும், சகோதரன் 1967 கிரக பாவமற்ற டாக்டருக்கு பட்டதாரிப் பெண்ணும், 1960 ஆசிரியருக்கு சைவபோசனப் பெண்ணும் தேவை. முழுவிவரம் ஜாதகத்துடன், தொடர்பு:-விள.இல.1342, மே/பா, உதயன். (90421)

உள்நாட்டில், வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்மாருக்கு மணமக்கள் தேவை. 30வயதுக்குட்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. விரும்புவோர் முழுப்போட்டோ, குறிப்புகளுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: நாகலிங்கம் கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (90477)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கழக வீரர்களான

**ம.சிவாஜி** (100m, 200m முதலாம் இடம்)

அவர்கள் பாடசாலை ரீதியிலான மாகாணப் போட்டிகளில் வெற்றியீட்டியமையையும், பிரதேசசெயலக ரீதியான மாகாணப் போட்டிகளில் பங்கு பற்றியதையும் பாராட்டுவதோடு,

**சி.சரிதா** (நீளம்பாய்தல் முதலாம் இடம்)

அவர்கள் பாடசாலை ரீதியிலான மாகாணப் போட்டிகளில் வெற்றியீட்டியமையை பாராட்டுவதோடு அவர்கள் தேசிய மட்டப் போட்டிகளிலும் வெற்றிபெற வேண்டுமென மனதார வாழ்த்துகிறோம்.

**இளைஞர் விளையாட்டுக் கழகம்,**
*அண்ணா சிலையடி*
*கரவெட்டி.* (90547)

## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேற்பிள்ளை மனோன்மணி

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேற்பிள்ளை மனோன்மணி காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெயதேவன்(மில்லேர்ஸ், கொழும்பு), கிருஷ்ணதாசன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பராசக்தி ஜெயதேவனின் அன்பு மாமியாரும், திருவிளங்கம் J.P அவர்களின் அன்புச் சகோதரியும், விகாஷின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(29-07-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி தெற்கு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கதிரவேற்பிள்ளை
(கணவர்)

*களவத்துறை ஒழுங்கை,*
*அராலி தெற்கு.* (90546)

## பொன்விழா பிறந்தநாள் வாழ்த்து



### திரு.பொன்னு தம்பிஐயா

அவர்கள் தனது பொன்விழா பிறந்த நாளை இன்று (29.07.2001) ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு மனைவி த.லீலாவதி, அருமை மகள் த.சர்மிலா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் அரியாலை சித்திவிநாயகர், நல்லூர்க் கந்தன் அருள்பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

ஐம்பதாம் அகவை ஆண்டவன் அருளினாலே
அனுதினம் போற்றிடும் அரியாலை விநாயகரின்
தம்பதம் நாடும் தயவினில் வாழ்ந்த அப்பா!
பண்பிலும் மேலாய் பரிவிலும் மேலாய்
செந்தமிழ் கற்றுச் சிறப்புடன் வாழ வைத்த
தென்பிலும் மேலாய் தெய்வமே நீடு வாழி!
நூறாண்டு காலம் நின்னையே தந்தையாக
நாடியே நிற்க நீயும் நயமுடன் வாழ்வீராக
பாரிலே பந்த பாசம் பாங்குடன் நிலைத்திடவே
யாருமே புகழும் வண்ணம் பல்லாண்டு காலம் வாழி
நோயும் நொடியுமில்லா நொந்துயர் தானுமில்லா
நாளும் சிறப்புடனே நல்லூரான் சேவடியில்
சீரும் சிறப்பும் நேர் மேவும் நன்மதிப்பும்
பாடும் புவனமதில் பல்லாண்டு காலம் வாழ!

*555/24, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
மகள் **த.சர்மிலா.**
(90554)

## கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன் குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில் No.89, HINNY APPUHAMY MAWATHA, CO. -13 இல் அமைந்துள்ளது "VANI INN" லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவு செய்து வரலாம். மேலதிக விவரமறிய: T.P: 01-433182, 472582

(90555) - முகாமையாளர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
05
-
11
-
1938



மறைவு
29
-
06
-
2001

### அமரர் செல்லத்தம்பி அமரசிங்கம்

**பண்புடன் வாழ்ந்த உங்களை மறக்க முடியவில்லையே**
**ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.**

எனது அன்புக் கணவரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும், தந்தி மூலம் இரங்கல் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல உதவி புரிந்தவர்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (29.07.2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்புத் தாய், மனைவி,
மகன்

'அன்பு நிழல்'
*465/3,சிவலிங்கப்புளியடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(90550)

கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து

# விமானப் பயணப் பதிவுகள் அதிக எண்ணிக்கையில் ரத்து!

## ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான தாக்குதலை அடுத்து பயணப் பதிவுகளை ரத்துச் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ''ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ்'' நிறுவனம் அறிவித்துள்ளது.

பிரிட்டன், ஜேர்மனி, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான தாக்குதலை அடுத்து தமது நாட்டுப் பிரஜைகளை இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என அறிவித்துள்ளன என்றும்—

இதனால் ஏற்கனவே பயணப்பதிவுகளை மேற்கொண்டவர்கள் கூட அவற்றை ரத்துச் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றும்—

அந்த நிறுவனம் தெரிவித்தது.

ஏற்கனவே நிறுவனத்துக்குச் சொந்தமான மூன்று விமானங்கள் முற்றாக அழிவடைந்ததனால் நஷ்டத்தை எதிர்நோக்கியிருக்கும் தமக்கு பயணப்பதிவுகள் ரத்துச்செய்யப்படுவது பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது என்றும்—

''ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ்' நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார். (ம-7)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை (உள்வாரி) பயில்வதற்கான தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள், கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி அன்று 50 வயதுக்கு உட்பட்ட — 3 வருடங்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்கள்—மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரையும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். மேலதிக விவரங்கள் ஓகஸ்ட் மாத 2 ஆம் திகதிய வர்த்தமானியில் உள்ளன. (ஜ-10)

# சுவாமி தந்திரதேவா மஹராஜ் நேற்று யாழ். வந்து சேர்ந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அமெரிக்க சுவாமிஜி தந்திரதேவா மஹராஜ் ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுப் பிற்பகல் விமானம் மூலம் யாழ். வந்து சேர்ந்தார்.

மாலை 4 மணியளவில் கந்தர்மடம் வேதாந்த மடத்தில் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பியின் இந்து சமய விவகாரங்களுக்குப் பொறுப்பாளருமான ந. திரிலோகநாதன் தலைமையில் மாலை 6 மணிக்கு வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலயத்தில் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று காலை 9 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலில் இடம்பெறும் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களின் ஓராண்டு நினைவுதின நிகழ்வில் சுவாமிஜி கலந்து கொள்வதுடன், சிறப்புச் சொற்பொழிவும் ஆற்றுவார்.

நண்பகல் 12 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய மகளிர் இல்லத்தில் நடைபெறும் கலை நிகழ்வில் சுவாமிஜி கலந்துகொள்வார். தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா தலைமையில் கரம்பொன் தேவன்கணை பிள்ளையார் ஆலயத்தில் சுவாமிஜிக்கு வரவேற்பு அளிக்கப்படும். (ம-7)

## மாணவருக்கு!

கைதடி — நாவற்குழி அ. த. க. பாடசாலையில் கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் ஜி. சீ. ஈ. சாதாரணதர மாணவர்களை விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுவதற்காக இன்று காலை 10 மணிக்கு நவாலி சென். பீற்றர் தேவாலயத்துக்கு வருகை தருமாறும் —

விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் இன்று அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

பாடசாலை அதிபர் வ. த. திருநாவுக்கரசு அறிவித்துள்ளார். (ம-7)

## கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டு அரையிறுதி ஆட்டங்களும் இன்று காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் அணியை எதிர்த்துச் சென்ட்ரல் அணி மோதும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அரை இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்து அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அணி மோதும். (உ-4)

# 'முதல் நன்மை' என்னும் முக்கிய கடன்

கத்தோலிக்கர்களின் வாழ்க்கையில் முக்கிய அனுஷ்டானமாக இடம்பெறும் 'முதல் நன்மை' பற்றிய கட்டுரை இது.

திருச்சபையின் மையமாக விளங்கும் அருளடையாளம் நற்கருணை. திருச்சபையை ஓர் அருளடையாளமாக மாற்றுவதும், நற்கருணையே. நமது வாழ்விற்குச் சக்தியை வழங்கி, நாம் மேலும் செயலூக்கம் பெற்றவர்களாகச் செயற்பட உறுதுணையாய் இருப்பது நற்கருணையே. ''உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்'' என்று கூறித் தம்மையே முழுமையாக வெறுமையாக்கிய இறைவன், நாமும் நம்முடைய சேவையின் மூலம் நம்மையே வெறுமையாக்க வேண்டும் என்று நினைவூட்டுவதும் இந்த நற்கருணை வழியாகவே (1 யோவான் 3:6).

இவ்வாறு கிறிஸ்தவ வாழ்வின் மையமாய் விளங்கும் நற்கருணை, முதன்முதலில் சிறுவர்களுக்கு அளிக்கப்படும் போது, அவர்கள் சிறந்த முறையிலும், பக்குவமான முறையிலும் தயாரிக்கப்படுவது மிகவும் அவசியம். ஒருவர் முதல் நன்மை பெற வேண்டுமெனில், கீழ்க்கண்ட விதிமுறைகளுக்கு அடங்க வேண்டும் என்று திருச்சபை கூறுகின்றது,

அவையாவன:

★ அவர் திருமுழுக்குப் பெற்றவராக இருக்கவேண்டும். ★ சிந்திக்கும் பக்குவத்தை (Age of reason) அடைந்திருக்க வேண்டும். ★ சாதாரண அப்பத்திலிருந்து நற்கருணையைப் பிரித்துப் பார்க்கக் கூடியவராக, இரண்டுக்கும் வேறுபாடு தெரிந்தவராக இருக்க வேண்டும் என்பனவாகும்.

இவை மட்டுமே ஒருவர் நற்கருணை பெறுவதற்கான தகுதிகளாக அமைந்துவிட முடியாது. அவர் நற்கருணையின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக, அதற்கும் தம்முடைய வாழ்விற்கும் உள்ள தொடர்பை ஓரளவிற்கேனும் உணர்ந்தவராக இருக்க வேண்டும். இதற்காக அவர் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவது அவசியம்.'

ஒரு குழந்தை நற்கருணை பெறுவதற்காக முன் தயாரிப்பு, அக் குழந்தை திருமுழுக்குப் பெற்றவுடனே தொடங்கிவிடுகின்றது. தங்கள் குழந்தைகளை இறைவிசுவாசத்திலும் நம்பிக்கையிலும் வளர்ப்பதாக வாக்களிக்கின்ற பெற்றோர், அக் குழந்தைக்கு நற்கருணையைப் பற்றியும், அதனுடைய சிறப்புப் பற்றியும் கற்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இறுதியில், முதல் நன்மை வழங்கப்படுவதற்கு முன்பு சில வாரங்கள் தீவிரத் தயாரிப்பு பங்கில் நடைபெறுகிறது. இந்தத் தயாரிப்புச் சீரிய முறையிலும் பயனுள்ள முறையிலும் அமைய வேண்டியது அவசியமாகிறது. அதற்கான ஒரு வழிமுறை இந்தக் கட்டுரையில் வழங்கப்படுகின்றது.

புதுநன்மை வாங்கப்போகும் குழந்தையின் மனப் பக்குவத்தை நல்ல முறையில் தயாரிப்பதுடன், நற்கருணை பற்றிய விவிலிய விளக்கங்கள், கருத்துக்களைக் கொடுப்பதும் தேவையாகின்றது. இவை கீழ்க்கண்ட படிமுறைகளில் நடைபெறலாம்.

### திருச்சபை

ஒருவர் திருச்சபையின் உறுப்பினராக இருந்தால் மட்டுமே அவர் நற்கருணை பெற இயலும். எனவே அவர் திருச்சபை பற்றித் தெரிந்திருக்க வேண்டும். திருசசபை இறைமக்களின் குடும்பம் என்பதையும், இயேசுவின் மீதும் பிறரின் மீதும் கொண்டுள்ள அன்பினால் பிணைக்கப்பட்ட சமூகம் என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும்.

ஞாயிறு நற்பிரசாதம்

### கொண்டாட்டம்

திருப்பலி ஒரு கொண்டாட்டம். சாவின் சக்திகள் சாகடிக்கப்பட்டதன் காரணமாக மாகக் கொண்டாடப்படும் மகிழ்ச்சிப் பெருவிழா. இறைவனையே உணவாக உண்ணும் பவர்வின் கொண்டாட்டம். வீட்டில் நடைபெறும் திருமணம், பிறந்தநாள் போன்ற கொண்டாட்டங்களுக்கு, நற்கருணைக் கொண்டாட்டத்திற்குமிடையே தொடர்பும், வித்தியாசமும் விளக்கப்படவேண்டும்.

### தியாகப் பலி

நற்கருணை ஒரு கொண்டாட்டம் மட்டுமன்று இந்த உலகம் உய்வதற்காக, இறைவன் தம்மையே முழுமையாக வழங்கிய தியாகத்தின் பலி. இறைவன் நம்மை அளவு கடந்த விதத்தில் அன்பு செய்ததன் காரணமாக தம்மையே வெறுமையாக்குகின்றார். பலியாக்குகின்றார். எனவே, குழந்தைகளுக்கு, அன்பிற்கும் தியாகத்திற்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பைத் தெளிவுபடுத்துதல் அவசியம்.

### நற்கருணையில் உணவாக வருபவர் இயேசுவே

தம்மையே பலியாக்கிய இறைவன் ''இதை என் நினைவாகச் செய்யுங்கள்'' என்று கூறி நற்கருணையில் பிரசன்னமாயிருக்கிறார். நாம் இறைவனோடும் பிறரோடும் உறவுகொள்ளச் சக்தியை அளிக்கிறார் இவை போன்ற உண்மைகளைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

மேற்கண்ட நான்கு படிமுறைகள் மூலம் திருச்சபை பற்றியும் நற்கருணை பற்றியுமான அடிப்படை மறை உண்மைகளை ஓரளவிற்கேனும் விளக்கிச் சொல்ல முடியும். மேலும் ஒவ்வொரு படிநிலையை விளக்குகின்றபோதும் அவற்றைப் பற்றித் தெளிவாகக் குழந்தைகள் புரிந்துகொள்ளும் வகையிலும், அவர்களுடைய வாழ்க்கை அனுபவத்தோடு இணைந்து செல்லக்கூடிய வகையிலும் எடுத்துரைக்க வேண்டும்.

இதற்கு இயேசுவினுடைய போதனை முறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. இயேசு ஒரு தலைசிறந்த ஆசிரியர். அவருடைய படிப்பினைகள், உவமைகள், மக்களின் உள்ளத்தைத் தொட்டனவாகவும், அவர்களைச் செயல்பாட்டிற்கும் அழைத்துச் செல்லக்கூடியனவாகவும் இருந்தன. இதற்கான காரணத்தைப் பார்க்கும்போது அவருடைய போதனைகளில் கீழ்க்கண்ட மூன்று நிலைகளைப் பார்க்க முடிகிறது.

★ இயேசு தம்முடைய உவமைகளில் பயன்படுத்திய பொருள்கள், உருவகங்கள் அனைத்தும் மக்களுடைய வாழ்க்கையோடு தொடர்புடையனவாகவும், அவர்களுடைய வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிப்பனவாகவும் இருந்தன. (உ-ம். விதைப்பவன் உவமையில்வரும் விதை, முட்செடி, பாறை நிலம், நல்ல நிலம் முதலியன).

★ இந்த அன்றாட வாழ்க்கை அனுபவத்தின் மூலம், இறையரசு பற்றிய தன்மைகள் கருத்துக்கள் ஆகியவற்றையும் பரப்பினார் (இறைவார்த்தையின் தன்மை பல்வேறு வகையான உள்ளங்கள்).

★ கேட்பவரின் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்தி, செயல்பாட்டிற்கு அழைத்துச் செல்லல். (இறைவார்த்தையைக் கேட்டு, வாழ்வில் பலன் தர அழைக்கப்படல்).

இந்த மூன்று நிலைகளை அடிப்படையாகக்கொண்டு, நம்முடைய பாட நிலைகளை பின்வருமாறு அமைத்துக் கொள்ள முடியும். (அ) குழந்தையின் அனுபவம், (ஆ) அனுபவத்திலிருந்து கோட்பாட்டிற்குச் செல்லல், (இ) செயல்பாடு

**நன்றி: பாதுகாவலன்**

(வளரும்)


## நன்றி நவில்கின்றேன்

எனது தாயார்

**மேரி சூசைமுத்தம்மா பிலிப்பு**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு என்னுடன் துயர் பகிர்ந்தவர்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள், குறிப்பாக இரங்கற் திருப்பலியில் கலந்துகொண்ட அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அருட் தந்தை டொன் பொஸ்கோ

அருள் ஆச்சிரமம்,
5 கோவில் வீதி, யாழ்ப்பாணம். (சி/17612)

## மரண அறிவித்தல்

**திருமதி பாக்கியம் குமாரசாமி**

இடைக்காட்டைச் சேர்ந்த திருமதி பாக்கியம் குமாரசாமி நேற்று (28-07-2001) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

இவர் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், செல்லபாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் பாசமிகு தாயாரும் சிவஞானசுந்தரம் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்) அவர்களின் அன்பு மாமியாரும் லோஜினி (கனடா), கஜினி (கனடா), ஞானசேகரன் (கனடா), கனகேந்திரன் (கனடா), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சகானா, சாயி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28-07-2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
மா. சிவஞானசுந்தரம்
(மருமகன்)

'பிருந்தாவனம்'
இடைக்காடு,
அச்சுவேலி. (90585)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Dr இன் பாவனையிலுள்ள

C-50 Motor Cycle

உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
SENATHY
MEDICAL CLINIC
இல.5, கடற்கரை வீதி,
நாவாந்துறை.
தினமும் மாலை 4மணி முதல் 6மணி வரை பார்வையிடலாம்.
(90567)



## மணமகள் தேவை

கடந்த பத்து வருடங்களாக இங்கிலாந்தில் நிரந்தரமாக வசிக்கும் 29 வயது, 6 அடி உயர, வெள்ளை நிறமுடைய, அச்சுவினி நட்சத்திர, M.Sc. பட்டம் பெற்று வங்கியில் உயர் பதவி வகிக்கும் பொறியியலாளருக்கு CIMA / பல்கலைக்கழகத்தில் கணனி / பொறியியல் பட்டம் பெற்ற பட்டதாரியை / இவ்வருடம் பட்டதாரியாகவுள்ள அழகிய மணமகளை இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் விரும்புகின்றனர். ஜாதகக் குறிப்பு, ஏனைய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்:

**விள. இல. 1332, மே/பா. உதயன்.**
(C/17492)


## இரு சடலங்களும் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

ஈவினையில் இடம்பெற்ற சம்பவமொன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து, சுன்னாகம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்த இனந்தெரியாத இரு இளைஞர்களின் சடலங்கள் கடந்த வெள்ளியன்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

கடந்த 21ஆம் திகதி ஒப்படைக்கப்பட்ட இச்சடலங்கள் எவராலும் இனங்காணப்படாத நிலையில் மல்லாகம் நீதிமன்ற உத்தரவின் பேரில் 6 நாள்களின் பின் அடக்கம் செய்யப்பட்டன.

இவை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் சடலங்கள் என நம்பப்படுகிறது. (ஜ-15)


## தீராத வியாதிகளைக் குணப்படுத்துதல்

நீரிழிவு, மூலரோகம், குடற்புண், உண்ணாக்கு அழற்சி, மாதுறு நோய்கள், செங்கண்மாரி, பாலரோகங்கள், ஆண்மைக்குறைவு, சருமரோகங்கள், கிரந்திமுட்டு, ஒவ்வாமை, சருமவெள்ளைப்புள்ளி போன்ற நோய்கள் பூரண குணமடைய நீங்கள் நாடவேண்டிய இடம்:

**அகஸ்தியர் வைத்தியசாலை**
Dr.K.V.Thurairajah (DAM RAMP)
Kulappiddy Junction,
Front of Market,
K.K.S. Road, Kokuvil.
(90573)


## இவரைக் காணவில்லை



ஸ்ரீசாயி ஆலயம் சுதுமலை வடக்கு மானிப்பாயில் வசித்து வந்த

### செல்வி நல்லையா கலாவதி

*(வயது 35)*

என்பவரைக் கடந்த 14.07.2001 சனிக்கிழமையில் இருந்து காணவில்லை. இவர் ஒரு மனநோயாளி; கடைசியாக - நீலநிறக் கவுணில் - வெள்ளைப் புள்ளிகள் உள்ள சட்டை அணிந்திருந்தார். பொது நிறமும் 5 அடி உயரமும் உடையவர். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் அறியத் தரவும்.

*ஸ்ரீசாயி ஆலயம்,*
*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.*

**செ.பூபாலசிங்கம்**
(ஆத்தாள்) (90560)

## உடன் தொடர்பு கொள்ளவும்

மீசாலை தட்டாங்குளத்தைச் சேர்ந்த அப்பாக்குட்டி இரத்தின குமார் என்பவரைக் கைதடியைச் சேர்ந்தவரும் தற்போது சவூதியிலிருந்து வந்திருப்பவருமான க.சிவகுமார் (சிவா) என்பவர் தன் னுடன் தனது நிரந்தர முகவரியில் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கின்றார்.

## பிரிவுத் துயர் பகிர்வு

யாழ்ப்பாணம் - அரியாலை
(இல. 50, விபுலானந்த வீதி)யைச் சேர்ந்த
முத்துக்குமாரசாமி - அனந்தலட்சுமி
ஆகியோரின் கனிஷ்ட புதல்வன்

### அரவிந்தன்

அவர்கள் 17.06.2001 ஆம் திகதி லண்டனில் அகால மரணமடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறுகின்றன. அமரரின் அகால மரணச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும், கடித மூலமாகவும் அனுதாபத்தைத் தெரிவித்து கவலையை எம்மோடு பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், அயலவர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*156, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (90544)

தகவல்:
ப.தருமலிங்கம்
(சித்தப்பா)

## NOTICE

**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

**FACULTY OF MEDICINE**

**NEW DATES FOR THE EXAMINATIONS**

**Second MBBS Examination - Practicals and Viva will commence from 30th July 2001.**

**Third MBBS Part II Examination for 18th batch (1995) 06.08.2001.**

**Third MBBS Part I Microbiology Examination for 19th Batch (1996) 13.08.2001.**

**Third MBBS Part I Examination for 20th Batch (1997) Will be held as scheduled earlier i.e. 20.08.2001.**

**Registrar,**
**University of Jaffna,**
**Srilanka.** (C/90561)

## நன்றி கூறுகின்றோம்

யாழ். சதுரங்கச் சம்மேளனத்தின் வளர்ச்சிக்காக ஊக்கமும் உதவியும் அளிக்கும் வகையில் முதற்கட்ட நிதியுதவி வழங்கிய வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார - இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனம்,
*யாழ்ப்பாணம்.*
(90561)

## சுன்னாகம்
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**ACTION CONTRE LA FAIM**
**பட்டினிக்கு எதிரான நிறுவனம்**

**உணவு பதனிடல் அலகானது உடுவில் சுன்னாகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.**

**இந்த அலகானது சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் (வரைவுள்ளது) அமுலாக்கப்பட்டு வருகின்றது. இதற்கு பட்டினிக்கு எதிரான நிறுவனம் (ACF) தொழில்நுட்ப அனுசரணை நல்கி வருகின்றது.**

**உற்பத்திப் பொருள்கள் ஜசுபி (JACHUFI) (யாழ்ப்பாணம் சுன்னாகம் பழத் தொழிற்சாலை) என்னும் பதிவுப் பெயரினைக் கொண்டிருக்கும்.**

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது இடைநிலை உணவு பதனிடல் முயற்சியின் ஊடாக யாழ். குடாநாட்டு உணவு உத்தரவாதத்தினை மீள் புத்தூக்கம் செய்வதாகும்.**

**யாழ். குடாநாட்டு விவசாயிகளின் உற்பத்தியை மூலப்பொருள்களாகப் பயன்படுத்தி பழக்கழி, பழக்கூழ், பழக்கூட்டு சட்ணி, ஊறுகாய் ஆகிய உற்பத்திப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படும்.**

**இத்திட்டத்திற்கு நிதி உதவியை கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபை (RRAN) ஊடாக வழங்கி உள்ளது.**

The construcation of a food processing unit is currently in progress in Uduvil, Chunnakam. The unit in being implemented by MPCS Chunnakam with the technical support of Action Contra La Faim. (ACF)

The procedure will be registered under the name JACHUFI (Jaffna Chunnakam fruit industry). The aim of the project is to contribute to food security by revitalising the medium scale food processing sector in Jaffna.

Jams, cordials, sauces, chutney and pickles will be produced with raw materials supplied by farmers in the peninsula. The project is being financed by the French Embassy in colombo and facilitated by RRAN.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அறங்காவற் சபையினரால் இன்று (29.07.2001) ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட இருந்த மஹா கும்பாபிஷேக மலர் வெளியீடு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. மலர் வெளியிடப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

துன்னாலை வடக்கு,
புலோலி. (C/17616)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
அறங்காவற்சபை.

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

வட. இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் இன்று (29.07.2001) ஞாயிறு அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிஷ்ட இலாபச்சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 26.08.2001ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

யாழ்ப்பாணம். (C/17615)

வட.இலங்கைப்
பத்திரிகையாளர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் நாதஸ்வர வித்துவான்

### N.K.கணேசன்

காரையம்பதி ஈழத்துச் சிதம்பர ஆஸ்தான வித்துவான் **இசைநாதமணி, இசைச்சக்கரவர்த்தி, நாதஸ்வர வித்துவான்** N.K.கணேசன அவர்களின் மறைவு காரை.வாழ் மக்களுக்கும், கலையுலகிற்கும், கலை ரசிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

*"அன்னாரின் இசை நாத வெள்ளத்தில் திருப்தி கண்டோ தில்லைக் கூத்தன் அவரை அரவணைத்துக் கொண்டார்?"*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

(90591) - நாதஸ்வர வித்துவான் S.S.சிதம்பரநாதன்.


**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்!
அஜித் (மாறுபட்ட 7வேடங்களில்)
வசுந்துராதாஸ், மீனா நடித்த

**சிட்டிசன்** (ரீல்ஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்) (90533)





## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
EN கேம்பிறிட்ஜ் கார்
(கறுப்பு நிறம்)
சாளி மோட்டார் சைக்கிள்
ஆகியவை
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
நிக்ஷன்
பல்பொருள் வாணிபம்,
பஸ் நிலையம், அச்சுவேலி. (C/17617)

**பொதுப் பரீட்சை - 2001**

பொது விழிப்பு
2000 Aug வினாவிடை
*கிடைக்கும் இடம்:*
**திகழ் கல்வி நிறுவனம்**
K.K.S. றோட்,
இணுவில். (C/17618)

**ராஜா** யாழ்ப்பாணம்

விஜயகாந்த், சாக்ஷி,
பிரகாஷ்ராஜ்,
ரம்யாகிருஷ்ணன், நாசர்
மற்றும் பலர் நடிப்பில

**வாஞ்சிநாதன்**

தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
அடுத்த வெளியீடு:-
பிரண்ட்ஸ் (C/17443)

**லக்ஷ்மி**
இணுவில்

அர்ஜுன் - அபிராமி நடிப்பில்

**வானவில்**

தினசரி 10.30, 2.30 (ப.நே.)
01-08-2001 முதல்
M.G.R இன்
**உரிமைக்குரல்** (ரீல்ஸ்) (90589)


## சேவைநலன் பாராட்டு விழா

**யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின்**

ஓய்வுபெற்ற அதிபர்

### திரு.தம்பையா அழகரத்தினம்

அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா
இன்று 29.07.2001 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில்
மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

(90579) *- பாடசாலைச் சமூகம்.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்வி மிதிலா கனகசிங்கம்

எமது கழகத்தைச் சேர்ந்த செல்வி மிதிலா கனகசிங்கம அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தடகள விளையாட்டு நிகழ்வுகளில் 200m (27.1 Secons), 400m, நீளம் பாய்தல் (5.27 meters) ஆகியவற்றில் முதலாம் இடத்தைப் பெற்று புதிய சாதனையை நிலைநாட்டியமையும் மைதிலி பூபாலசிங்கம அவர்கள் 100m இல் 3ஆம் இடத்தினைப் பெற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(90584) *– அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர்.*

# ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்களை கௌரவித்துப் பாராட்டுகின்றோம்



*கனகரத்தினம் கனேசவேல்*
யாழ்ப்பாணம்



*சன்முகம் சிவகுமாரன்*
வலிகாமம் தென்மேற்கு



*சபாபதி நாராயனன்*
வலிகாமம் தென்மேற்கு



*கதிரவேலு கந்தையா வேலாயுதபிள்ளை*
வலிகாமம் வடக்கு



*சின்னத்துரை தவரத்தினம்*
வலிகாமம் கிழக்கு



*சிதம்பரப்பிள்ளை தில்லையம்பலம்*
தென்மராட்சி



*கந்தையா வேலாயுதபிள்ளை*
தென்மராட்சி



*பொன்னையா கனேஷ்*
வடமராட்சி தெற்கு மேற்கு



*சித்தன் கனேசு*
வடமராட்சி தெற்கு மேற்கு



*துரைராசா கணபதிப்பிள்ளை*
வடமராட்சி வடக்கு



*கணபதிப்பிள்ளை சண்முகநாதன்*
வடமராட்சி வடக்கு

*கார்த்திகேசு கோபாலப்பிள்ளை* — நெடுந்தீவு

*கார்த்திகேசு தில்லையம்பலம்* — யாழ்ப்பாணம்

*முத்துக்குமாரு மயில்வாகனம்* — நல்லூர்

*வைத்தீஸ்வரன் குனாளன்* — தென்மராட்சி

*செல்லையா கனேசு* — வடமராட்சி தெற்கு மேற்கு

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இன்று நடைபெறுகின்ற யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்க பொதுக் கூட்டத்தில் ஓய்வுபெற்றுள்ள இக்கிராம உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் சார்பில் அரசாங்க அதிபரினால் கௌரவிக்கப்படுகின்றனர்.

*68, பலாலி வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.* (90586)

**- யாழ்ப்பாண மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம்.**

# கேந்திர நிலைகளின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை29

கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலை அடுத்து நாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்தகைய இடங்களில் மேலதிக படையினரும் பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இந்த அதிரடித் தாக்குதலின் இலக்கு விமானப்படையினரின் தாக்குதல் பலத்தைக் குறைப்பதும் அரசின் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு சீர்குலைப்பதுமே ஆகும் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்ததை அடுத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று படையினர் சந்தேகிக்கும் - எதிர்பார்க்கும் - கிடைத்த புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் இனம் காணப்பட்டிருக்கும் - கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கே இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் -

ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் அலரி மாளிகை, நாடாளுமன்றம், ஜனாதிபதி செயலகம், முப்படைகளின் தலைமை அலுவலகம், படைத்தளபதிகளின் வீடுகள், பொலீஸ் தலைமை அலுவலகம் மற்றும் பொலீஸ்மா அதிபரின் இல்லம், பொருளாதார மையங்கள், வங்கித் தலைமை அலுவலகங்கள், விமான நிலையம், துறைமுகம, தொலைக்காட்சி நிலையம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தொலைத்தொடர்பு மையம், கொலன்னாவை பெற்றோலியக்குதம், மின் உற்பத்தி நிலையங்கள், தொலைத் தொடர்புக் கோபுரங்கள் ஆகியன அமைந்துள்ள பிரதேசங்களுக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புக்கு மேலதிகமாகத் தற்போது விசேட பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் முப்படைகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட படையினரும், விசேட பொலீஸாரும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.(ம-6)

அதி நவீன ரகத்தைச் சேர்ந்த

## சத்தமின்றித் தாக்கும் ஆயுதங்கள் புலிகளுக்குக் கிடைத்தது எப்படி?

### அதிகாரிகள் புலன் விசாரணை

கொழும்பு,ஜூலை29

கட்டுநாயக்கா விமானத் தளத்துக்குள் ஊடுருவிய புலிகளின் தாக்குதல் பிரிவுக்கு சத்தமின்றித் தாக்குதல் நடத்தக்கூடிய அதி நவீன - மிக வலுவுள்ள தாக்குதல் ஆயுதங்கள் கிடைத்தது எப்படி?

-இவ்வாறு ஆச்சரியமடைந்திருக்கும் இராணுவ அதிகாரிகள் இந்த விடயம் குறித்து முழு அளவிலான புலன் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இத் தாக்குதலின் போது புலிகள் பயன்படுத்திய அதி நவீன ஆயுதங்களைத் தான் முன்னெப்போதும் கண்டதில்லை என விமானநிலைய பாதுகாப்புக்குப் பொறுப்பான தலைமை அதிகாரி விங் கொமாண்டோ புவனேகடி அபேசூரிய தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (உ)

## கலைநிலா

யாழ்ப்பாணம்,ஜூலை29

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்த கலைநிலா அரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நடனங்கள், வாய்ப்பாட்டு, வசந்தன் ஆட்டம், வாத்தியஇசை என்பன இடம்பெறவுள்ளன.

சிறப்பு நிகழ்ச்சியாக 'விடலைக் குமுறல்' என்ற நாடகம் இடம்பெறும்.

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கம் பயங்கரவாத அடிப்படையிலான அமைப்பு என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. புலிகளின் உண்மை வடிவம் இப்போது தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

"இலங்கையில் இப்போது தான் அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து மக்களின் கருத்துக் கேட்கப்படுகின்றது. அரசமைப்பு மாற்றத்துக்கு மக்களின் இணக்கம் கிடைக்குமாயின், புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக மக்களின் கருத்தறியும் முயற்சி பரந்தளவில் விஸ்தரிக்கப்படும்" - என்றார் கதிர்காமர்.

அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு மக்கள் ஆதரவளித்தால் அது புதிய பொதுத் தேர்தலுக்கான அனுமதியாகக் கருதப்பட்டு, புதிய தேர்தல் நடைபெறும் என்ற கருத்தை இந்தப் பேட்டியில் அவர் மறுக்கவில்லை. (உ)

## ஜானக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேச சேவை விமானத்தில் ஜெனரல் ஜானக பெரேரா கொழும்பு வந்து சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் கட்டுநாயக்கா தாக்குதலினால் பெரும் பாதுகாப்பு நெருக்கடிகளை அரசு எதிர்கொண்டிருக்கும் போது -

ஆஸ்திரேலியாவில் தான் தூதர் பதவி ஏற்று ஓரிரு வாரங்களுக்குள், அங்கிருந்து புறப்பட்டு ஜானக பெரேரா கொழும்பு வந்து சேர்ந்ததற்கு பல அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான அவர் இராணுவத்தில் - அல்லது முப்படைகளுக்குப் பொறுப்பான - ஒரு பதவியில் மீண்டும் அமர்த்தப்படுவார் என்று முன்னர் அடிபட்ட வதந்திகள் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளன.

கட்டுநாயக்கா தாக்குதலை அடுத்து பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருக்கும் இராணுவத்துக்கு நெருக்கடி காலப் பணிக்கான ஆலோசனைகளை வழங்குவதற்காக அவர் பயன்படுத்தப்படலாம் என்ற மற்றொரு ஊகமும் செய்தி வட்டாரங்களில் அடிபடுகின்றது. (உ)

## யாழ்.குடாநாட்டுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகச் செய்திகள் வெளியானதும் -

தீவுப்பகுதியில் முறைகேடான விதத்தில் ஈ.பி.டி.பி. வாக்குகளை அள்ளியதாக முறைப்பாடுகள் கூறப்பட்டு வந்ததும் - கூடத் தெரிந்தவையே.

தற்போது ஈ.பி.டி.பி. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு சார்பாக - சர்வஜன வாக்கெடுப்பில் அவரின் நிலையை வரவேற்று நிலைப்பாடு எடுத்துள்ளதாலும் -

அரசில் அக்கட்சி அங்கம் வகிப்பதால் அதனால் ஏற்படும் மேலதிக அதிகார வசதிகளும் அதற்கு இருப்பதாலும் -

பொதுத் தேர்தலை விட இம்முறை கூடியளவு முறைகேடுகள், குளறுபடிகள், சீர்கேடுகள் இடம்பெறலாம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி உட்பட பெரும்பாலான எதிர்க்கட்சிகள் நம்புகின்றன.

இக்காரணத்தினால் சர்வஜன வாக்கெடுப்பின் போது குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய பொது உத்திகள் குறித்து அக்கட்சிகள் கூடி ஆராய்ந்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கூட்டத்திலேயே தெற்கிலிருந்தும் தேர்தல் முகவர்களை வடக்கே அனுப்புவதற்கு முடிவு காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தென்னிலங்கையில் ஐ.தே.கட்சி, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகள் அனைத்தும் சர்வஜன வாக்கெடுப்பில் ஜனாதிபதியின் கோரிக்கையை எதிர்க்கும் அணியில் ஒன்று திரண்டுள்ளன. இந்த அணியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் எந்நேரமும் சேரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு இந்த அணியில் பல பெரிய கட்சிகள் ஒன்றாக இணைவதால், ஒவ்வொரு பிரதேசத்துக்குமான தேர்தல் முகவர்களுக்கான பொதுப் பட்டியல் ஒன்றை இவை இணைந்து தயாரிக்கும் போது தேர்தல் முகவர்களுக்கான ஆள் பற்றாக்குறை இல்லாமல் போகும் என்றும் -

மேலதிகமாக ஆள்கள் மிஞ்சுவர் என்றும் - சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறாக மேலதிகமாகத் திரட்டக்கூடிய ஆள்களையே குடாநாட்டுக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

தமது கட்சியின் சார்பில் சுமார் இருநூற்றியைம்பது பேரை தேர்தல் முகவர்களாக வடக்கே அனுப்புவதற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது. ஏனைய எதிர்க்கட்சிகளும் தத்தமது கட்சிகள் சார்பில் ஒரு சிறிய எண்ணிக்கையானோரையாவது தேர்தல் முகவர்களாக வடக்கே அனுப்ப ஆர்வம் காட்டி வருகின்றன.

இவ்வாறு தென்னிலங்கையிலிருந்து வரும் தேர்தல் முகவர்களில் பெரும்பாலானோர் சிங்களவர்களாக இருப்பர் என்பதால், அவர்கள் பணியாற்றும் இடங்கள் தோறும் மேலதிகமாக உள்ளூர் முகவர் ஒருவர் அல்லது இருவர் நியமிக்கப்பட்டு அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவர் என்றும் கூறப்பட்டது.

படையினர் மற்றும் பொலீஸார் தேர்தல் முறைகேடுகளுக்கு உடந்தையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணித்து, அதைத் தடுப்பதற்கான முயற்சிகளிலும் -

பெரிய அளவில் தேர்தல் முறைகேடுகள் நடக்காமல் பார்த்துக் கொள்வதிலும் -

உள்ளூர் தேர்தல் முகவர்கள் அச்சுறுத்தப்படுவதை தவிர்க்கச் செய்வதிலும் -

தென்னிலங்கையிலிருந்து வரும் தேர்தல் முகவர்கள் முனைப்பாக இருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

தென்னிலங்கையிலிருந்து தேர்தல் முகவர் பணியாற்ற வரக்கூடிய ஆள்களினது விவரங்களைத் திரட்டிப் பட்டியல் படுத்துவதிலும்-

அவர்களுக்கான பிரயாண, தங்குமிட ஏற்பாடுகளைச் செய்வதிலும்-

ஐ.தே.கட்சி சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டது.(உ)

## இரு சிறுவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காலை 7.30 மணியளவில் சில ஷெல்கள் கிராமத்திலும் கிண்ணையடி வாவியிலும் வீழ்ந்து வெடித்ததாகவும் -

கும்புறுமூலை இராணுவ முகாமிலிருந்து இந்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர்.

கும்புறுமூலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து தாம் பதில் தாக்குதல் நடத்தியதாகப் படையினர் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவ[illegible]ாக இருப்பதாக வைத்திய[illegible]ாரங்கள் தெரிவித்தன. (ம-6-21)


## ரஷ்யாவில்

குறைந்த செலவில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அக்கடமியில் மருத்துவக் கல்வி

Smolensk State Medical Academy
'General Medicine'

மருத்துவப்பட்டம் - Doctor Of Medicine (M.D.)
முதல் வருடம் - 1200 US $
பின்னைய வருடங்கள் - 1500 US $
2001/2002 கல்வியாண்டு September இல் ஆரம்பம்.
அனுமதி, கல்வித்தகைமை, கல்விமுறை மற்றும் மேலதிக விவரங்களுக்கு நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

"Subasthan"
52/3, Kawdana Road,
Dehiwela.
T.P/Fax:-
01-736240 or 077316273 (C/17613)

"Subasthan"
672, K.K.S. Road,
Jaffna,
T.P:- 021-2536


## கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்

காரைநகர்
நாதஸ்வர வித்துவான்

### N.K.கணேசன்

அவர்களின் மறைவு காரைவாழ் மக்களிற்கும் கலையுலகிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருடன் எமது கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*ஐடியல் அக்கடமி,*
*காரைநகர் - சண்டிலிப்பாய்.*

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(C/17625)


## ஈசன் கல்வி நிலையம்

பௌதிகவியல்

A/L 2002

வெப்பவியல்

MON.:-6.30 a.m., FRI.:-4.30 p.m.

A/L 2003

ஒளியியல்

MON., TUE.:-3.30 p.m.

திரு.குமரன் (B.Sc.)

(90475)

ஆரம்பம்:- 30-07-2001(MON) 6:30 a.m.



## சுனில் ஆட்ஸ்

18.07.2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
30.07.2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
Video Cassette கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்

277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

*Note:-*

1. A.R.Rahman இன் Hindi புதிய ஓடியோ CDக்கள் விற்பனைக்கு உண்டு.
2. MP3 Hindi, Tamil CDக்கள் விற்பனைக்கு உண்டு.
3. Video Cassette இல் இருந்து CDக்கு பதிவு செய்து தரப்படும்.
4. Computerக்கான உதிரிப் பாகங்கள் விற்பனைக்கு உண்டு.

(C/17620)


## மரண அறிவித்தல்கள்

### நடராசா ஞானபாலசிங்கம்

கோண்டாவில் வடக்கு, சிவபூதவராஜர் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா ஞானபாலசிங்கம் நேற்று (28.07.2001) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் தாரணி (இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), யாழினி (இராமநாதன் கல்லூரி), திவாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), தாட்சாயினி (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் தந்தையும் ஞானசோதி, ஜெயபாலசிங்கம் **(Jaffna Technical Institute)**, தனபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும் கமலாதேவி, வேலுப்பிள்ளை ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் சிறிகாந்தராசா, தெய்வசக்தி (மகாஜனாக்கல்லூரி), ரதி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் தனேஸ், தர்மினி, ரஜீவ்குமார், ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தனுஷன், நிதர்ஷன், தரண்யா, நிஷான், நிருஷன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (29.07.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவபூதவராஜர் வீதி,*
*கோண்டாவில் வடக்கு.* (C/17619)

தகவல்: - குடும்பத்தினர்.

### திருமதி யோகலிங்கம் மனோரஞ்சிதராணி

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திருமதி யோகலிங்கம் மனோரஞ்சிதராணி 24-07-2001 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - தங்கம்மா (ஜேர்மனி) தம்பதிகளின் மூத்த மகளும் யோகலிங்கத்தின் அன்பு மனைவியும், சுரேஷ்குமார் (ஜேர்மனி), ஜெயந்தி (நடன ஆசிரியை), சுதர்சன் (லண்டன்), தமயந்தி (வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுகிர்தனின் (நிர்வாகி, ஸ்ரார் கல்வி நிலையம் - சுன்னாகம்), அன்பு மாமியாரும், பாலஸ்காந்தன் (ஜேர்மனி), மனோரமா (ஜேர்மனி), சந்துருகாந்தன் (ஒஸ்திரியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சங்கிர்தன், தருஷன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-07-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.* (C/17624)

க.யோகலிங்கம் (கணவர்),
சோ.சுகிர்தன் (மருமகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.